# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !
அசத்தியம் அழிந்து விட்டது !
நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

January 2022 ஜனவரி 2022



Retail Selling Price 20
Page 1

Volume - 13, Issue - 11

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

எங்கும் நிறைந்த அல்லாஹ்வின் திருவருளாலும், ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும், அன்னவர்களின் திருப்பேரர் **குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் நல்லாசியாலும் நிகழும் **ஹிஜ்ரீ 1443- ம் ஆண்டு ரஜப் மாதம் பிறை (02.02.2022)** புதன்கிழமை மாலை வியாழன் இரவு 8 மணி அளவில்,

மதுக்கூர் மர்ஹூம் எம்.எம். முகம்மது அப்துல்லா,
மர்ஹூம் ஏ.எஸ். முகம்மது யாக்கூப் இவர்களின்பேரனும்,
ஜனாப். எம்.எம்.ஏ. முகம்மது உசேன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின்
அன்பு மகனுமாகிய தீன் குலச் செல்வன்

## Er. M. முகம்மது இம்ரான் B.Tech.,

ஹக்கிய்யுல் காதிரிய்
மணமகனுக்கும்

பட்டுக்கோட்டை மர்ஹூம். எம். காதர் பாட்சா, மதுக்கூர் ஜனாப். ஒ.பி.யு. அப்துல் ரெஜாக் ஆகியோரின் பேத்தியும்,ஜனாப். கே. நத்தர்ஷா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் அன்பு மகளுமாகிய தீன்குலச் செல்வி

## N. பஸீஹா B.B.A., ஹக்கிய்யுல் காதிரிய்

மணமகளுக்கும்

இன்ஷாஅல்லாஹ் நிக்காஹ் செய்வதாய் பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் **மதுக்கூர் சிரமேல் குடிகாடு சிவக்கொல்லை ஏ.கே.எ.ஸ்.திருமண மஹாலில் மதியம் 12.30 மணியளவில்** நடைபெறும் விருந்து உபசரிப்பிலும் மற்றும் இரவு 8.00 மணியளவில் பெரியார் நகர், **இடையக்காடு எனது இல்லத்தில் (தாருல்ஹிதாயா) நடைபெறும் நிக்காஹ் மஜ்லிஸிற்கும்** கலந்துகொண்டு சகல வைபவங்களுக்கும் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி துஆ செய்திடவேண்டுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்களை அன்போடு வரவேற்கும்,*
**S.ஹாஜாமைதீன் & சன்ஸ் ஹக்கிய்யுல் காதிரிய்**
**M.அப்துல் ஜப்பார் & சன்ஸ் ஹக்கிய்யுல் காதிரிய்**
**A.S.M.M.அகமது பாரூக் & சன் ஹக்கிய்யுல் காதிரிய்**
**M.அப்துல் கபூர் & பிரதர்ஸ்**

மருமகன்கள்:
**S.சேக் தாவூது & சன்.ஹக்கிய்யுல் காதிரிய்**
**M.சேக் பரீது ஹக்கிய்யுல் காதிரிய்**
**A.ஜகபர் அலி & சன்**

*மற்றும்...*
**M.M.A.குடும்பத்தார்களுடன்**
**சுற்றமும்-நட்பும்!**

***தங்கள் அன்புள்ள***
**M.M.A.லியாகத் அலி**
**M.M.A. முகம்மது உசேன்**
ஹக்கிய்யுல் காதிரிய்
மு.மு.அப்துல்லா இல்லம்
23/B, மரியம் நகர், இடையக்காடு,
மதுக்கூர் - 614903
செல்: 7094579992

இணைந்து அழைக்கும்...
(மருமகன்)
**A.ராசீத் தைமூர் & சன்**

**Be in all and get the power of God**

## ஆன்மிக மாத இதழ்


**வெளியிடுவோர்**

**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**

பாகிரா காம்ப்ளக்ஸ் 74, பழனிரோடு.

திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா

அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா

நாயகம் அவர்கள்

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி

ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,

52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**

**கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்**

229/ 4, மீரா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி,

ஃபயர் சர்வீஸ் எதிரில், திண்டுக்கல் - 624 001.

**CELL : 99445 76165**

**Website:www.emsabai.org**

**email: aalimpulavar07 @ gmail.com**

**email: j.mdrahmathulla@yahoo.com**


# மறை ஞானப் பேழை


**ஜமாதுல் அவ்வல்- ஜமாதுல் ஆகிர்**

**ஜனவரி 2022**

**Volume - 13 Issue -11**


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில்.....*

*திருமறைப் பக்கம்.*

*ஹதீஸ் பக்கம்.*

*சபைச் செய்திகள்.*

*அமுத மொழிகள்.*

*அறபு பைத்து*

*கல்வத்து நாயகம் (ரலி)*

*ஹள்ரத் நிஜாமுத்தீன் அவ்லியா.*

*ஆறுதல் பெற்ற கட்டுரை.*

*தப்லீகின் வஹ்ஹாபியக் கொள்கை....*

*வஸீலா*

*என் புனிதப் பிரயாணம்.*

*உம்மு ஸல்மா (ரலி)*

*இனிக்கும் இறைமொழி.*

*இஸ்லாத்தின் உண்மை!*

*மற்றும் பல்சுவை செய்திகள்.*

# முரீதாகிய நான்.....

வலிகள் கோமான் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்கள் ,“ அன்பனே! உன் கல்பை (நஃப்ஸை) வெளியே எடுத்து ஒரு தட்டில் வைத்து வீதி வழியே ஊர்வலமாகக் கொண்டு போனால் அதைப்பார்த்து யாரும் முகம் சுளிக்காமல் இருந்தால் நீ உண்மையிலேயே மூமின்தான்” என்று கூறினார்கள்.

ஏனென்றால், மனிதன் பிறரிடம் மறைத்து வைத்திருக்கும் தீய விஷயங்களெல்லாம் பளிச்சென்று வெளியே தெரியும்போது, மக்கள் பார்த்து, ஆஹா! இவரைப்பற்றியா நாம் உன்னதமாக நினைத்திருந்தோம்! இவ்வளவு கேவலமாக இவரது உள்ளம் இருக்கின்றதே என முகம் சுளிக்கத்தானே செய்வார்கள். அவர் செய்த பாபங்களின் நாற்றம் அருவருப்பைத்தானே உண்டு பண்ணும்.

ஆத்ம ஞானிகளின் உள்ளங்களை வெளியே எடுத்து ஊர்வலமாகக் கொண்டு போனால் அது ரோஜா– மல்லிகை போல மணம் வீசும். அதன் மணம் ஊரையே – தெருவையே வாசமாக்கிவிடும்.

மனிதனின் கல்பு இறைவனின் பார்வை நேரடியாக விழும் இடம். “ அல்லாஹ் உங்கள் உருவத்தையோ, உடையையோ பார்ப்பதில்லை. உள்ளத்தைத்தான் பார்க்கின்றான்” என்று உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்துள்ளார்கள் அல்லவா?

மனிதன் தன் ஆடைகளை அழுக்குப்படாமல் – கறை விழாமல் காப்பாற்றுவது போல் உள்ளத்தையும் பாப அழுக்குப்படாமல் பாதுகாக்கவேண்டும்.

உள்ளம் பொய், பொறாமை, கோள், புறம், பெருமை போன்ற தீமைகள் நிறைந்த குப்பை மேடாக இல்லாமல், நல்லெண்ணம், தியாகம், இறைவேட்கை, நபிக் காதல் போன்ற செல்வங்கள் சேமித்த கருவூலமாக இருக்க வேண்டும்.

நம் கண்கள் அடுத்தவர் என்ன செய்கின்றார் என்பதைக் கண்காணிப்பதை விட்டுவிட்டு என் நஃப்ஸு என்ன சொல்கின்றது? எதைச் செய்யத் தூண்டுகிறது? எந்தப் பாவத்திற்கு அழைக்கிறது? என்பதைக் கண்காணித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

மற்றவர்கள் எப்படியோ ஒரு செய்கிடம் பைஅத்துப் பெற்ற முரீது இந்த விஷயத்தில் அவசியம் விழிப்பாக இருக்கவேண்டும்.

நான் ஒரு முரீதாக இருக்கிறேன் என்ற எண்ணம் எப்போதும் இருந்தால் அது செய்கின் பொருட்டால் – பரக்கத்தால் அவரைக் கரை சேர்த்துவிடும்.

அல்லாஹ் அனைவரையும் கரை சேர்ப்பானாக!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

## அஷ்ஷைகுல் காமில் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



ஒரே பாரம்பரியத்தில் வந்துதித்து ஒரே ஞானப்பாதையை விளக்க வந்த குத்புமார்களான செய்குமார்களான மகான்களில் ஒருவரை ஏற்றியும் மற்றவரைத்தூற்றியும் இந்தத் தரீக்கா மேலானது இது கீழானது எனக்கூறியும் திரிவது தாமே தம்மையறியாத மடமையாகும். எனவே, எல்லாத்தரீக்காக்களும் ஒன்றே; எம்மை இறையின் பால் ஒரே பாதையிற் செலுத்துவனவாகும். முஹிய்யுத்தீன் ஆண்டவர்களையோ அவர்களது தரீக்காவையோ தூற்றுபவர்கள் உண்மையில் ஷாதுலி ஆண்டவர்களையும் அவர்களின் தரீக்காவையும் தூற்றுபவர்களாவர். இவ்வாறே ஏனைய மகான்களும் அவர்கள் தரீக்காக்களான ஞானப்பாதைகளும் என அறிந்து மடமையான கொள்கைகளை மனந்திருந்தி நீக்கித் தெளிவடைதல் வேண்டும்

**– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –**

# ஜமாலிய்யாத் தோட்டத்தில்

மானிட வாழ்வில் இகம், பரம் என இரண்டு உண்டு எனவும் அவை இரண்டும் உடலும் ஆத்துமாவும் (ரூஹும்) எனக்கருதப்படும் எனவும் முன்னர் எழுதினோம். அவ்வாறே உடலுக்கும் ரூஹுக்கும் தந்தையர் உளர். உலகிலே மானிடனாய்ப் பிறக்க உதவிய தந்தையை உடலின் தந்தையென்போம். அவரைவிடவும் மேலான ஆத்துமாவைப் பக்குவப்படுத்தி அவ்வுலகத்தில் துன்பமின்றி வாழ வழிவகுத்துத்தந்த செய்கை (ஞானகுருவை) ரூஹின் (ஆத்துமாவின்) தந்தை எனக் கூறுவோம்.

அவரே இகம், பரமாம் இரண்டின் பொறுப்புக் களுக்கும் உரியவராகின்றார். இதனாற்றான் ஷாதுலிஆண்டவர்கள், உனக்கு உலகு சம்பந்தமான விடயங்களைக் கற்பித்தானே அவன் உனக்குச் சூது செய்தான். உள்ளத்தைச் சுத்தப்படுத்துகிறது சம்பந்தமான விடயங்களைக் கற்பிக்காமல் (அமல்) வணக்கங்களைப் பற்றி மாத்திரம் கற்பித்தானே அவன் உன்னை வருத்தப்படுத்தினான். இறைவனைப் பற்றி உனக்குக் கற்பித்தானே அவன் உனக்கு நல்லுபதேசம் புரிந்தான் எனக் கூறினார்கள்.ஆதலால் இறைவனைப்பற்றிய விளக்கங்களைத் தரும் செய்கு தந்தையாய் மதிக்கப்படுகிறார் என்பதை நன்கறிதல் வேண்டும்.

நபிமார்களிற் பல திறப்பட்டவர்கள் இருந்தமை போன்று ஞான குருமார்களிலும் பலதிறப்பட்டவர்கள் உள்ளார்கள். குதுபுமார்கள், வலீமார்களிலும் செய்குமார்களிலும் பல வகைப்பட்டோர் உள்ளனர். தரத்துக்கேற்ப அவர்கள் செய்யும் பைஅத்திலும் ஏற்றத்தாழ்வு உண்டு. எவர் எப்படியாயினும் ஞானம் எனும் வஹ்தத்துல் வுஜ்தை யார் நன்கறிந்தாரோ அவர் செய்யும் பைஅத்தே மிகத் திருப்திகரமானதாகும்.

*(பேரின்பப்பாதை நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)*

## கொய்த மலர் கொய்த மலர்

# அல்லாஹ் அருளுகிறான்.

■ அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் யார் கருமித்தனம் செய்கின்றார்களோ அது தமக்கு நல்லது என (அவர்கள்) நிச்சயமாக எண்ணவேண்டாம். அவ்வாறன்று; அது அவர்களுக்குத் தீங்குதான். அவர்கள் கருமித்தனமாகச் சேர்த்துவைத்த (பொருட்கள்) எல்லாம் மறுமையில் அவர்கள் கழுத்தில் அரிகண்டமாக போடப்படும். வானங்கள் பூமி ஆகியவற்றில் (இருக்கும் அனைத்துக்கும்) அனந்தர பாத்தியதை அல்லாஹ்வுக்கே உரியதாகும். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் அறிகின்றான். (3.180)

■ போருக்குச் செல்லாமல் அந்த முனாஃபிக் (நயவஞ்சகர்கள்) தங்கள் வீடுகளில்) அமர்ந்து கொண்டே (போரில் இறந்த) தங்கள் சகோதரர்களைப்பற்றி, அவர்கள் எங்களைப் பின்பற்றியிருந்தால் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள் என்று கூறுகிறார்கள். நீங்கள் (சொல்வதில்) உண்மையாளர்களானால் உங்களை மரணம் அணுகாவண்ணம் தடுத்து விடுங்கள் (பார்ப்போம் என்று) (நபியே) நீங்கள் கூறுங்கள் . (3.168)

■ தனிமையில் தமது இறைவனை அஞ்சுவோருக்கு மன்னிப்பும் பெரிய கூலியும் உண்டு. (67-12)

ஹதீஸ்

# அண்ணலார் அறிவுரை

## பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமைகள் 14.

**வாழும்போதே செய்ய வேண்டியவை 7.**

1. **அ**வர்களுக்கு மரியாதை செய்வது. 2. அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்படுவது. 3. பணிவிடை செய்வது. 4. அவர்கள் மீது அன்பைக்காட்டுவது . 5. வேலைப் பளுவைக் குறைப்பது. 6. அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது. 7. அடிக்கடி அவர்களைச் சந்திப்பது.

**அவர்கள் மரணித்தபின் செய்யவேண்டிய கடமைகள் 7.**

1. **அ**வர்களின் பாவமன்னிப்புக்காகவும் ரஹ்மத்துக்காகவும் துஆ செய்வது. 2. ஏதாவது நன்மையான காரியங்களைச் செய்து அவர்களுக்கு எத்தி வைப்பது. 3. அவர்களின் உறவினர்கள் நண்பர்கள் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு கண்ணியம் அளிப்பது. 4. அவர்களின் உறவினர் நண்பர்களுக்கு இயன்றவரை நன்மை செய்வது. 5. அவர்களின் கடனை - அமானிதத்தை நிறைவேற்றுவது. 6. அவர்கள் வாழ்நாளில் செய்த, மார்க்கத்தில் ஆகுமாக்கப்பட்ட வஸிய்யத்தை நிறைவேற்றுவது. 7. அவர்களின் கப்ருக்குச் சென்று அடிக்கடி ஜியாரத் செய்வது.

# சம்பைப்பட்டினம் கந்தூரி விழா!

சம்பைப்பட்டினம் சங்கைமிகு ஜமாலிய்யா செய்யிது முஹம்மது மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் 73 ஆவது புனித கந்தூரி விழா ஜமாதுல் அவ்வல் பிறை **1 (06.12.2015)** திங்கட்கிழமையன்று சங்கைமிகு A. சைய்யிது மஸ்ஊது மௌலானா அல்ஹாதி அவர்களின் மகனார் செய்யிது யாஸீன் மௌலானா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

காலை 10 மணியளவில் சுப்ஹான மௌலிதும் ராதிபும் ஓதப்பட்டது. ராதிபுக்குப்பின் நடைபெற்ற கந்தூரியில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் வெளியூர் மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

காலை உணவினை நஜ்முத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் (லண்டன்), திருச்சி யாஸீன் ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி பக்ருத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோரும், பூ அலங்காரம் திருச்சி யாஸீன் ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி பக்ருத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி இப்றாஹீம் ஹக்கிய்யுல் காதிரிய் யாஸீனீய் ஆகியோரால் செய்யப்பட்டது.

சம்பைப்பட்டினம் அப்துல் ஜப்பார் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் தலைமையில் பேராவூரணி சபை முரீதுகள் மிகச்சிறப்பாகச் செய்திருந்தனர். விழாவில் உள்ளூர் மக்கள், ஜமாஅத்தார்கள், சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதுகள் அனைத்து ஊர்களிலிருந்தும் வந்து கலந்து பயன் பெற்றனர்.

## ஆத்ம சகோதரர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

நமது ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை யின் அதிகாரப்பூர்வ இணைய தளங்களான

**https://www.emsabai.net**

**https://awniyyabookstore.com**

**https://www.yaseenrali.com**

20.12.2021 திங்கள் முதல் பயன்பாட்டில் உள்ளது.**https://www.emsmedia.net** என்ற இணைய தளத்தில் பல்சுவை சார்ந்த விடயங்கள் உள்ளன. வஹ்தத்துல் உஜூத் ஞானம், இஸ்லாமிய மார்க்கம், சமூகம் சார்ந்த கட்டுரைகள் நிறைய காணக் கிடைக்கின்றன. **EMSweb TV** யும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. மறைஞானப் பேழையைப் படிப்பதற்கு வசதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு பயனாளருக்கும தனித்தனி புரொபைல் தரப்பட்டு அதன் மூலம் எதிர்காலங்களில் சபை சார்ந்த சந்தாக்களை செலுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**https://awniyyabookstore.com** என்ற இணையதளம் ஆருயிர் செய்கு நாயகத்தின் மற்றும் சபையின் அனைத்து நூற்களையும், குறுந்தகடுகளையும் விற்பனை செய்யும் தளமாக இயங்கும்.

**http://www.yaseenrali.com** என்ற இணையத்தளம், ஆருயிர் தந்தை நாயகம் அவர்களுக்கான பிரத்யேக இணைய தளமாக இருக்கும். இந்த இணைய தளங்களின் உருவாக்கத்தில், பல ஆத்ம சகோதரர்கள் பங்களிப்பு செய்துள்ளார்கள்.

**https://awniyyabookstore.com** இணையதளத்தினை பல ஆத்ம சகோதரர்கள் இணைந்து உருவாக்கம் செய்துள்ளார்கள்.

**B.** நூருல் அமீன் **B.Tech,** திண்டுக்கல். **A.** ராஜா முஹம்மது யாஸீனிய் **BCA,** மணப்பாறை. **K.** ஐனுல் ஹக் **B.E, MBA** திண்டுக்கல். ஜனாப் ஹிஸாம் ஹிஜாஸ், இலங்கை.

**https://www.emsmedia.net** இணையதளத்தினை பல ஆத்ம சகோதரர்கள் இணைந்து உருவாக்கம் செயதுள்ளார்கள்.

**M.** ஆசிக்குர் ரஹ்மான் **MS (IT)** சிங்கப்பூர். **K.** ஐனுல் ஹக் **B.E,** திண்டுக்கல். **M.A.** ஸாதிக் **B.Com,** துபை. ஜனாப். ஹிஸாம் ஹிஜாஜ், இலங்கை. **K.** ஜைனுல் ஹக் **B.E,** திண்டுக்கல். **M.** ஜைனுல் ஹக் **B.Tech,** திண்டுக்கல். **J.** முஹம்மது யாகூப் **B.E,** திண்டுக்கல். **S.** ஜுபைர் **B.E,** அபுதாபி. மன்னை தாவூத் **B.Com,** துபை. **Master M.** ஃபாரிஹ் (**S/O** முஹம்மது மீரான், குவைத்) **Master J.** முஹம்மது மாஜித் (**S/O** ஜஉபர் ஸாதிக் அபுதாபி)

**http://www.yaseenrali.com** இணையதளத்தினை பல ஆத்ம சகோதரர்கள் இணைந்து உருவாக்கம் செய்துள்ளார்கள்.

ஜனாப். ஹிஸாம் ஹிஜாஜ், இலங்கை. ஜனாப். ஹபிலுர் ரஹ்மான் **MCA,** துபை. ஜனாப். முஹம்மது மீரான் யாஸீனிய், குவைத்.

### *ஆலோசகர்கள்:—*

ஜனாப் ஹைதர் நிஜாம் **B.E, M.A.** ஸாதிக் **B.Com,** துபை. மன்னை தாவூத் **B.Com,** துபை. ஜனாப். முதுவை இம்தாதுல்லாஹ் **DEEE,** எகிப்து.

பங்களிப்புச் செய்த அனைத்து ஆத்ம சகோதரர்களுக்கும் மற்றும் இந்த இணைய தளத்தினை வடிவமைத்துத் தந்த திருச்சி **iLife technologies** நிறுவனத்தின் **Managing Director M. Dhanraj MCA.,** அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறோம். **(64 ஆம் பக்கம் பார்க்க...)**

# திருக்குறள்

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

பணிவுடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும். அவர்களுள் சிறப்பாகச் செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றதாகும்.

# தீன் குறள்

**தம்பணியும் ஆற்றித் தவப்பணியும் ஆற்றுவார்**
**செம்பணிமுன் ஊர்பணியும் சேர்ந்து**

தம் செயலையும் தவச்செயலையும் ஆற்றும் உயர் செயலுடையவர் முன் ஊரே சேர்ந்து பணிவு காட்டும். *– தத்துவக்கவிஞர். இ.பதுருத்தீன் –*

## இருமாதச் சிறப்பு தினங்கள்

جمادى أول

**ஜமாதுல் அவ்வல்**

| பிறை | |
|---|---|
| 1 | சம்பைப்பட்டினம் ஜமாலிய்யா மௌலானா (ரலி) அவர்களின் கந்தூரி |
| 17 | பதிவுத்தீன் ஸிந்தா மதார் (ரலி) மறைவு |
| 22 | அஹ்மது கபீர் ரிஃபாயி (ரலி) மறைவு |
| 25 | கீழக்கரை மஹானந்த பாபா (ரலி) கந்தூரி |
| 29 | காலித் இப்னு வலீத் (ரலி) மறைவு |

ربيع ثان

**ஜமாதுல் ஆகிர்**

| பிறை | |
|---|---|
| 5 | மௌலானா ரூமி (ரஹ்) மறைவு |
| 2 | கம்பம் அம்பா நாயகம் கந்தூரி |
| 10 | நாகூர் ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) கந்தூரி |
| 14 | இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) மறைவு |
| 17 | காயிதே மில்லத் (ரஹ்) மறைவு |
| 22 | அபூபக்ர் ஸித்தீக் (ரலி) மறைவு |

## *யா ரசூலல்லாஹ்.......!*

**என் பாவம் நீங்குமோ...? யா ரசூலல்லாஹ்!**
**கண்கள் உங்கள் திருமுகம் பாராமல் பாவம் இழைத்தது!**
**காதுகள் உங்கள் குரல் கேளாமல் பாவம் இழைத்தது!**
**வாய் உங்கள் புகழைப் பாடாமல் பாவம் இழைத்தது!**
**விரல்கள் உங்கள் புகழெழுத என்பாவம் நீங்குமோ? யா ரசூலல்லாஹ்!**

*ஃ பரீஹா பின்த் அக்பர் அலி*

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்



# அமுத மொழிகள்

எ சிலரிடத்தில் இறைவனைப் பற்றியறிய மிக ஆவலுள்ள மற்றும் சிலர் அல்லாஹ் எங்கிருக்கிறான்? அவனின் தன்மை யாது? எனக் கேட்பாராயின், இவற்றினுக்கு விடையாக வாய்மூடு; இப்படியெல்லாம் கேட்காதே; சிர்க்கு; குப்று; ஹராம், எனவெல்லாம் கூறிக், கேட்போர் தம் வாய்களை அடைத்து விடும் பழக்கம் நம்மவர் அதிகம் பேரிடத்துள்ளது. இவ்வாறு பயப்பட இதிற்பேயுமில்லை; பூதமுமில்லை. இதில் இருப்ப தெல்லாம் அன்பும் அருளும் நன்னெறியும் உயர்நிலையும் மோட்சமுமாகும்.

எ அஷ்ஷெய்கு இமாம் ஸதகத்துள்ளாஹில் காஹிரி (ரஹ்) அவர்களுக்கும் அவர்கள் தம்பி, ஞானஜோதி, வலிய்யுல் காமில் அஷ்ஷெய்கு ஸலாஹுத்தீன் வலிய்யுள்ளாஹ் அவர்களுக்கும் இடையில் நடந்த ஒரு சம்பவம் இங்கே அறிதல் வேண்டற்பாலது. இவர்கள் மிகச் சிறந்த ஆலிம். நிறைய நூல்கள் கோவை செய்தவர்கள். அறபியறிவில் மிக்க வல்லமையுடையவர்கள். தர்ரபல் ஆலம் என்ற, நபிகளார் அவர்கள் மீது இயற்றப்பட்ட, சிறப்பு வாய்ந்த மவ்லிதும் அவர்களால் எழுதப்பட்டதாகும்.

இவர்கள் சிறுவயதிலேயே ஞானமோகத்தில் அமிழ்ந்திருந்தவர்கள். இறையில் இலயித்தவர்கள். அந்தக் காலத்திலேயே அவர்கள் இமாம் ஜமாஅத்துடன் தொழப் பள்ளிக்குப் போதலில்லையாம். இதனாற் சிலர் இதனை இமாம் அஷ்ஷெய்கு ஸதகதுள்ளாஹில் காஹிரி (ரஹ்) அவர்களிடம் முறையிட்டனராம். இமாம் அவர்கள் தம்பியிடம்

சென்று நீர் இனிமேல் ஜமாஅத்துடன் தொழப்பள்ளிக்கு வரவேண்டும் என்று கோபமாய்க் கூறிவிட்டுப் போனார்களாம். இமாம் அவர்கள் தாயாரிடம் சென்று தம்பி ஸலாஹுத்தீன் ஜமாஅத்தோடு தொழப் பள்ளிக்கு வாராரில்லை. அவ்வாறு தொழவராவிட்டால் அவருக்குச் சாப்பாடு கொடுக்க வேண்டாம் என்று கூறிவிட்டுப் போனார்களாம். ஸலாஹுத்தீன் வலிய்யுள்ளாஹ் வீடு வந்தபோது தாயார், நீங்கள் பள்ளிக்கு ஜமாஅத்துடன் தொழப் போகின்றீர்களில்லை என்றும் அவ்வாறு சென்று தொழாமற்போயின் உங்களுக்குச் சாப்பாடு கொடுக்க வேண்டாம் என்றும் அண்ணன் கூறினார். ஆதலால் பள்ளிக்குப் போய் ஜமாஅத்துடன் தொழுதுவிட்டு வாருங்கள். சாப்பாடு தருவேன் என்றார். தாயும் சகோதரரும் சொல்லியமையால் அப்போது பள்ளிக்குச் சென்று இமாம் ஜமாஅத்துடன் கலந்து கொண்டார்கள். இமாம் ஜமாஅத்தை ஸதகதுள்ளாஹில் காஹிரிய் (ரஹ்) அவர்கள் நடாத்தினார்கள். தம்பி ஸலாஹுத்தீன் வலிய்யுள்ளாஹ் பின் நின்று தொழுதார்கள். அப்போது இமாமாக நின்று தொழவைக்கும் தம் அண்ணன் அவர்கள், மழை பெய்வதைக் கண்ணுற்று மழைபெய்வதால் மேயச் சென்ற தாய்ப்பசு வீடு வந்து கட்டிவைத்துள்ள கன்றுக்குப் பாலூட்டுமே. இதைக் கவனித்தற்கெவருமிலரோ என்ற யோசனையுடன் தொழவைத்தார்களாம். இமாம் அவர்களின் மனதில் ஊடாடிய ஊசாட்டத்தையறிந்த தம்பி வலிய்யுள்ளாஹ் ஸலாஹுத்தீன் (ரஹ்) அவர்கள் தொழுகையை விட்டுவிட்டு இடையில் போய்விட்டார்களாம். வலிய்யுள்ளாஹ் வீடு சென்று தாயாரிடம் சாப்பாடு கேட்டார்கள். அப்போது ஏன் தொழாமல் சீக்கிரமே திரும்பி விட்டீர்களா? என்று கேட்டபோது, இல்லை, அண்ணன், மழைபெய்கிறதாம் வெளியிற் சென்ற பசு வந்து குட்டிக்கு பாற்கொடுக்குமாம் என்று நினைத்துக் கொண்டு தொழ வைக்கிறார். அதனால் நான்தொழாமல் வந்து விட்டேன் என்று கூறினார்களாம். தொழுகையை முடித்துக் கொண்டு இமாம் ஸதகத்துள்ளாஹ் (ரஹ்)

## அமுத மொழிகள்

**அவர்கள் தம்பி இடையில் ஓடிவந்த செய்தியைத் தாயாரிடம் சொன்னபோது தம்பி அவர்கள் சொன்ன சம்பவத்தை அவர்களிடம் தெரிவித்தார்கள். அதைக்கேட்டு இமாம் அவர்கள் தம்பி காமில் வலிய்யாக இருக்கிறார் என்று கருதி தம்பியின் விடயங்களில் தாம் தலையிடுவதை நிறுத்தி விட்டார்கள். இச்சம்பவம் வெளியே கட்டியிருக்கின்ற மாடு நனைகிறதென்று நினைத்தார்களென்றும் ஹைளின் பாடத்தை நினைத்தார்களென்றும் வேறுபடக் கூறப்படுகின்றது. இதிலிருந்து தொழுகை எப்படியிருக்க வேண்டும் என்பதையும் வலிய் ஒருவரின் வணக்கம் எவ்வாறு உள்ளது என்பதையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.**

**ஐங்கடமைகளில் முதன்விமையாய் விளங்கும் அல்லா(ஹ்)வை (இறைவனை)ப் பற்றியறிதல் சற்றுமின்றி ஏனையவற்றை முற்றும் செய்தாலும் அவை முறையறவேதான் நிகழும். தாம் செய்யும் வணக்கங்களோடு இறைவனைப் பற்றிச் சிந்தித்து அவன் தன்னையறிதலும் மிக முக்கியம். இறைவனை யறிந்து அவ்வண்ணம் செய்தலே முழுமையும் முறையுமான பூரண வணக்கமாகும்.**

---

♦ இறைவனோவெனின் அனைத்தையும் வேற்றுமையறப் பற்றி நின்றவனெனினும் பற்றற்றவன். அத்தகைய அப்பரம்பொருளின் அங்கங்களாயுள்ள நாமும் எதனையும் பற்றாதிருக்க முடியாதெனினும் ஒடும் புளியம்பழமும் போலிருத்தல் அவசியமே. இஃதே இல்லறத் துறவு என்க.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு."

என்பது பொய்யா மொழி. "அனைத்துப் பொருளையும் பற்றி நின்று பற்றறுத்த இறையோன் வகுத்த நன்னெறியாம் வீட்டின்பத்தை விருப்புடன் உள்ளத்துட்கொள்க. ஏனைப் பொருட்களிலுள்ள பற்று நீங்குதற்கு பற்றிய பற்றுடன் தியான சமாதிகளை உளமாரச் செய்க." என்பதிதன் கருத்து.

## அமுத மொழிகள்

♦ "தத்துவமசி" எனும் மகாவாக்கியமும் இதனையே சம்பூரணமாய் விளக்குகின்றது.

"துவந்தத் தசியே தொந்தத் தசியும்" எனத் திருமந்திரம் கூறுகின்றது. இவற்றின் கருத்து "அது நீ ஆகின்றாய்" அல்லது "நீ அது ஆகியிருக்கின்றாய்" என்பதாகும்.

"தொம்பதந் தற்பதஞ் சொல்லும் அசிபதம்" எனத் திருமந்திரம் எடுத்துரைக்குமாப் போலும் "தத்துவமசி" என்னும் மகாவாக்கியம் முப்பதக் கருத்துடையது. எனவே, "தத்துவமசி" என்பது, தத் – துவம் –அசி எனவும், துவம் – தத் – அசி எனவும், அதுவே தொம் – தத்து – அசி எனவும் நின்று, தொம்பதம் – தற்பதம் – அசிபதம் என அரும்பொருள் அள்ளி அருளி நிற்கின்றது காண்க. தத் என்பது தற்பரமாய் நின்று அது என்னும் பிரமத்தையும், துவம் என்பது தொம்பதமாய் நின்று நீ என்னும் கூடத்தன் எனும் பரப்பிரமத்தையும், அசி என்பது அசிபதமாய் நின்று ஆகியிருக்கின்றாய் எனவும் கருத்துக் கொடுக்கிறது.

தற்பத நிலையானது தன்னையும் தன் தலைவனையும் அறிந்த நிலையாகும். இதனைத் தனக்குத்தானாய் அல்லது தன்னிற்றானாய் இருக்கும் நிலை எனலாம். தொம் பதம் என்பது நீ, நான் எனத்தோன்றும் நிலை எனலாம். அசிபதம் என்பது இறைவனும் சீவனும் ஒன்றுகூடும் ஐக்கிய நிலை எனலாம். இதுவே இரண்டறக்கலக்கும் நிலையாகும். இதை அரபு மொழியில் "விஸால்" என்போம். இம்முத்தரங்களை, அ–உ–ம ஒன்று சேர்ந்த ஓம் எனும் சூக்குமப் பிரணவம் என்போம். இதனையே அரபு மொழியில் ஹு எனக் கூறுகின்றோம்.

இறையில் ஐக்கியப்படலும் அதனிமித்தம் இன்பத்தையடைதலும் சீவமுத்தர்களாய்ப் பிரகாசித்தலுமே மானிட ஜன்மம் பெறற் கரிய பெரும்பேறாகும். இதற்காகவே பிரம்ம ஞானமாகிய ஏகத்துவ ஞானம் உத்தம புருடர்களுக்கு அருளப்பட்டது. அனைவரும் இவ்வருளொளியைப் பெறுவதனால் மருணீக்கப்பட்டு ஞான சம்பந்தமுடைய உத்தமர்களாய் வாழ்வார்களாக! எங்கும் மெய்ஞ்ஞானம் பரவி வையகத்தார் மெய்யகம் பெறுவார்களாக! ஞானப் பிரகாசம் அடைவார்களாக!

***(பேரின்பப்பாதை நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)***

**கௌதுஸ்ஸமான் ஜமாலிய்யா மௌலானா (ரலி) அவர்கள் துர்ரத்துல் ஆரிஃபீன் ஃபீ அக்லாகிஸ் ஸாலிஹீன் என்ற கிதாபில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது மவாஹிபுல் அன்வார் ஃபீ மனாகிபில் முஸ்தஃபல் முக்தார் என எழுதியிருந்த அற்புதமான பைத்து.**



بلبل الى سبع رأى ما من الورى
عجائبها ما زاغ بصر بما طرا

رقى العرش والكرسي من ساد في الورى، ورتبة المولى وناجاه بالبشر

رضينا بامداح النبي جموعنا
ولذت لنا من كل حلوى طموعنا
وطابت بها الالباب مع كل سمعنا

رأينا نجاة في وداد شفيعنا، وليلة مدح المصطفى ليلة القدر

زهقت بذ بني عن جناب نزاهه
فمن لي شفيع غيره بانتجاهه
لذا انه مولينا الكريم الهه

زوال همومي قد رجوت بجاهه، وارجو علوما بالهبات فوتر

زخارف نور الهاشمي ملائح
دواما بكل الكون والشرق لايح
وارجو به الارشاد والكرب نازح

زكي عفيف النفس والمسك فائح، بها وجميع الطيب منها مبر

سَمَحْتَ بِخَيْرَاتٍ لَنَا وَقَسَمْتَهَا
وَنِلْتَ فَضِيلَاتٍ بِحُبِّكَ رُمْتَهَا
وَفُقْتَ جَمِيعَ الرُّسْلِ فَضْلًا ضَمِمْتَهَا

سَرَايِرَ أَكْوَانٍ جَمِيعًا عَلِمْتَهَا، وَكُنْتَ رَسُولًا هَادِيَ الْجِنِّ وَالْإِنْسِ

سَمَا وَعَلَا قَوْمٌ وَأَصْغَوْا لِنُصْحِكُمْ
فَطُوبَى لَهُمْ فَازُوا بِطَوْعِ صَرِيحِكُمْ
وَلَا يَسْتَوِي صَدْحٌ يُسَاوِي لِصَدْحِكُمْ

سُرُورِي وَأَفْرَاحِي وِدَادِي لِمَدْحِكُمْ، فَجُدْ لِي وِدَادًا فِيهِ حِفْظًا مِنَ الرَّجِسِ

شُغِلْتُ بِدُنْيَايَ الْغَرُورَةِ قَوْلِهَا
وَأَلْهَيْتُ عُمْرِي فِي الْمَعَاصِي وَشُغْلِهَا
تَرَكْتُ كَثِيرَ الْفَرْضِ وَاجِبِ فِعْلِهَا

شَمِلْتُ ذُنُوبًا لَا أُطِيقُ بِحَمْلِهَا، فَجُدْ لِي بِمَحْوِ الذَّنْبِ حُبُّكَ فِي الْحَشَا

شَرَحْتَ لَنَا دِينًا بِهِ فَوْزُ سَرْمَدِ
وَأَنْجَيْتَنَا مِنْ كُلِّ بَغْيٍ وَمُفْسِدِ
مَنَحْتَ لَنَا فَوْزًا بِدُنْيَا وَفِي غَدِ

شفى الله امراضي بفضلك سيدي ، مدحتك قد ارجو الحماء من الفحش

صلاح اموري والسقائم شافيا
رجوت بمدح المصطفى وهو كافيا
لعفو ذنوبي والمآثم نافيا

صفا القلب للعشاق والوقت صافيا ، بحب رسول الوصف في محكم

صفي وفي لم يشنه ملمة
واخلاقه جود وعفو ورحمة
كريم جناب فيه بشر وطلقة

صدوق له خلق عظيم وخلقه ، وما كان ينطق عن هوى قال الحضي

ضحى الحق والعرفان ظهرا وقد ضحى
حميد خصال منك والسعد قد نحا
الينا بفوز دام وهو مفرحا

ضلال وكفر قد ازيلا وزحزحا ، بدينك رشدا والاله له مرضي

ضحكت وقلبي غافل لطغى الاذى
على الناس ما ارجو صلاحا له غدا

فجد لي هدى ترجوه يا صاحب الشذا

ضمينا امينا كنت للظبي هكذا، تخلصني من كل موذ ومن قرض

ع

طرى وجرى في الكون مدح المهمة
دوا ما النور العالمين العمومة
دخيلا انا في المادحين الكريمة

ط

طما ونما كالبحر مدح الائمة، عليك ومدحي مثل عين بلا بسط

طفا كل احزاني بوصفك موفرا،
لاجري بنيل الفرج والهم مدبرا،
بفضلك يا من كنت في الخلق انورا

طمعت بمدحي فيك يا شافع الورى، لتشفع لي في يوم فقري من السخط

ع

ظريف لشيا انت خير تاء تبدا
لاهل الهدى فاز وبجودك سرمدا
فجد لي ودادا فيك يا صاحب الندى

30 ط

ظلمت على نفسي فما عدت في غدا، سوى خرجتي فيك وهو نجا فظ

ظليلا لا يرى للخلق في الحشر بالشفا

بظل لواء الحمد من جودك الصفا
فكل الورى يرجونك شافعا كفى

ظفورا بنصر الله كنت مشرفا ، بارغام اعداء عليك تغايظ ،

عسى الله ان يعفو ذنوبي وزلتي
بجاهك يا خير الهداة الاجلة ،
فجد لي حماء من جميع المذلة ،

عزمت بمدحي فيك ترشد ضلتي ، ولو كنت عبدا اكثر الذنب يجمع

علمت باني اكثر بالخطيئة
وانت كريم الجود خير البرية
فكن لي غفورا كل ذنبي وزلتي

عصيت بجهلي يا شفيعي وعمدتي ، فخذ بيدي انت الشفيع المشفع

غذائي واكلي مع شراب القناعة
ثنائي عليكم يا رسول الشفاعة
سلام عليكم يا نبي البراعة ،

غزير صلوة كل وقت وساعة ، عليكم من الرحمن كالغيث مفرغ

தொடரும்......

3

# கல்வத்து நாயகம் (ரலி)

*M. சிராஜுதீன் –திருச்சி.*

ஒரு நாள் கல்வத்து நாயகம் அவர்கள் தமது தந்தையாரை அணுகி, வாப்பா! நான் 'கம்சு' ஓதுவதற்கு 'பைத்து' சொல்லி தாருங்கள்! என்று கேட்டார்கள்.

உடனே அவர்கள் ஒரு தாளை எடுத்து,

"யா கைர சூலி அஞ்சிஃ மசூலி
அஸ்ரிஹ் உசூலி இல் உசூலி"

என்பதைத் தொடக்கமாகக் கொண்ட சில கண்ணிகளே எழுதிக் கொடுத்தார்கள்.

இதன் பொருள், "எனது தேவைகளில் நலமானவனே! என்னுடைய இறைஞ்சுதலை வெற்றியாக்கி அருள்வாயாக!

மூலப் பொருளில் நான் இணைந்து விடுவதைத் துரிதப்படுத்தியருள்வாயாக!!" என்பதாகும்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் தம் மகனாரை பள்ளியில் சேர்த்து விடும்போது கூறியதற்கு ஒப்ப, கல்வத்து நாயகம் நாலரை ஆண்டுகளில் அதாவது அவர்களுக்கு ஒன்பதரை வயதான பொழுது குர்ஆன் முழுவதையும் ஓதி மனனமும் செய்து 'ஹாபிழ்' ஆகி விட்டார்கள்.

இதன்பின் அவர்கள் அரபியிலுள்ள மார்க்க நூல்களைத் தம் அருமை தந்தையாரிடமும், சிறிய தந்தை அப்துல் காதிர் ஆலிம் சாஹிப் அவர்களிடமும் ஓதினர்.

கல்வத்து நாயகம் அவர்களுக்குப் பத்து வயதானபோது ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரலி) அவர்களுடைய நூல்களைத் தாமாகவே படித்து ஆராயத் தொடங்கினார்கள். அதில் காணப்பட்ட

"அனல் குர்ஆனு வஸ்ஸப்வுல் மதானீ
வரூஹுர் ரூஹி லா ரூஹுல் அவானீ
ஃப ஆதி இன்த மஷ்ஹூதி முகீமு
யுஷாஹிபஹு ல இன்த குமு லிஸானீ"

என்னும் கவியின் உட்பொருள் விளங்காது பெரிதும் சிரமப்பட்டார்கள். யாரிடம் சென்று இதற்கு விளக்கம் கேட்பது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் திருமரபில் தோன்றி, நாற்பது ஆண்டுகளாக மஜ்தூப் ஆக இருந்த தம் மாமா செய்யிது முஹம்மது ஆலிம் அவர்களின் நினைவு வந்தது. ஆம்! அவர்கள் தகுதியானவர் என்று முடிவுகட்டிக் கொண்டு அவர்கள் தனித்திருக்கும் சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டே இருந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் ஒரு மரத்தடியில் தனியே அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். உடனே அவர்களிடம் சென்று, ஸலாம் உரைத்து, தமக்கு ஏற்பட்ட சந்தேகத்திற்கு விளக்கம் கேட்டார்கள் அப்போது அவர்கள், “எங்கே அந்த பைத்தைப்படி!” என்று கூறினார்கள். அவ்விதமே அவர்கள் அந்த பைத்தை மிக அழகாக படித்தார்கள். மாமா மனம் குளிர்ந்து, “மிகவும் அழகாகப் படிக்கிறாயே, நீ யார் மகன்?” என்று கேட்டார்கள், அதற்கு அவர்கள், “நான் மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் மகன்” என்று பதில் கூறினார்கள். உடனே அப்பெரியார், “நீ மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் மகனாக இருந்து கொண்டா இந்த பைத்திற்கு உட்பொருள் விளங்க என்னிடம் வந்தாய்?” என்று அவர்களிடம் கேட்டு விட்டு அவர்களுக்கு அந்த பைத்தின் உட்பொருளை மிகவும் தெளிவாக விளக்கிக் கூறினார்கள்.

இதன்பின் சிலகாலம் சென்றது. கல்வத்து நாயகம் அவர்களுடைய பாட்டனார் தைக்கா சாஹிபு வலீ அவர்கள் தாம் மறைவதற்கு முன் தம் சீடர் ஒருவரிடம் ஒரு திக்ரைக் கூறி? “என் பேரன் பெரியவன் ஆனபின் இந்த திக்ரை அவருக்கு சொல்லிக் கொடுக்கவும்!” என்று பணித்தார்கள்.

ஆனால் அந்த சீடர் அதை மறந்துவிட்டார். டெல்லிக்கும் சென்றுவிட்டார். சிலகாலம் கழித்து அவர் ஊர் திரும்பும் போது இந்த செய்தி நினைவுக்கு வந்தது. உடனே ஓடோடி சென்று கல்வத்து நாயகம் அவர்கள் முன் வந்து நின்றார். உடனே கல்வத்து நாயகம் அவர்கள், அவரைப் பார்த்து நீங்கள் சொல்லவந்த திக்று எனக்குத் தெரியும் என்று அதை அப்படியே ஓதிக் காண்பித்தார்கள். வந்த நபர் திடுக்கிட்டுப் போனார்.

கல்வத்து நாயகம் அவர்களின் தந்தையார் கொஞ்சம் பொருளைத் தந்து நாகூர் சென்று வியாபாரம் செய்து வரும்படி கூறியனுப்பினார்கள். அதன்படி இவர்களும் நாகூர் வந்து வியாபாரத்தை திறம்படச் செய்தார்கள்.

நாகப்பட்டினம் முஹம்மது ஹுசைன் மரைக்காரிடம் கொஞ்சம் கடனும் பெற்று வியாபாரத்தை மேன்மேலும் விரிவாகச் செய்து வந்தார்கள். கை நிறைய லாபம் வந்தது. அதைக் கண்டு சந்தோஷப் படாமல் வருத்தப் பட்டார்கள். காரணம் இப்பொருள் நம் மனதை மாற்றி உலக ஆசையில் தள்ளி விடுமோ என்று பயந்தார்கள்.

நேரே தம் பாட்டனார் அவர்களின் அடக்க விடத்திற்கு முன்நின்று தம் மனக் குறையை சொல்லிக் காட்டினார்கள். அன்றிரவு அவர்கள் கண்ட கனவில் தைக்கா சாஹிபு அவர்கள் திருத்தோற்றம் தந்து, "மகனே! உலக மாயை உங்களை நோக்கி வந்ததைக் கண்டு கவலைப்பட வேண்டாம்! அது வந்தது போல் விலகிவிடும்" என்றார்கள்.

அதன் பின்னர் அவர்கள் ஒழுங்காக கவனமாக வியாபாரம் செய்தும் பெரும் நட்டம் ஏற்பட்டு லாபத்தையும் அசலையும் அடித்து சென்று விட்டது.

மரைக்காரிடம் பெற்ற கடனைத் திருப்ப வீட்டில் உள்ள பெண்களிடம் உள்ள நகைகளை பெற்றுக் கொண்டு நாகப்பட்டிணம் சென்று ஹுஸைன் மரைக்காயரைப் பார்த்தார்கள். ஆனால் அவரோ இவர்களிடம் நகைகளை திரும்பக் கொடுத்துவிட்டு கணக்கை நேர்செய்து விட்டு மீண்டும் புதுக் கடனாகப் பணம் தந்து வியாபாரத்தைத் தொடரச் சொன்னார்.

அதன்படி அவர்கள் வியாபாரத்தைத் தொடங்கி சிறப்பாகச் செய்தார்கள். நாகூரிலும், கீழக்கரையிலும் கடைத் திறந்து சிலோனிலிருந்து நூதனப் பொருட்களை தருவித்து வாணிபம் செய்து வந்தார்கள். வாணிபம் வளர்ந்தது கடனெல்லாம் தீர்ந்தது. வீட்டு மனைதோட்டம் என்று வாங்கினார்கள்.

இதனால் அவர்கள் இறைவழிபாடும் இறை சிந்தனையும் சிறிதும் குறையவில்லை. ஒவ்வொரு நாளும் காலை ஒன்பது மணிக்கு அரூஸிய்யா தைக்காவுக்குச் சென்று மாணவர்களுக்குப் பாடம் போதித்து விட்டு, தம் பண்டக சாலைக்கு வந்து வியாபாரத்தைக் கவனிப்பார்கள். லுஹருக்கும் அஸருக்கும் இடையில் இருபது, முப்பது கடிதங்களுக்கு பதிலை எழுதிவிட்டு, அஸரிலிருந்து மஃரிப் வரை இறை வழிபாட்டில் இருப்பார்கள் பின்னர் திரும்பவும் பண்டக சாலைக்குச் சென்று அன்று நடந்த வரவு செலவுகளைப் பார்த்துத் திட்டம் கட்டி விட்டு பள்ளி சென்று 'இஷாத்' தொழுவார்கள்.

'இஷாத்' தொழுது உணவுண்ட பின் ஆன்மீக நூல்களை நள்ளிரவுவரை படித்துக் கொண்டிருப்பார்கள். அதன்பின் சற்று நேரம் படுப்பார்கள். 'தஹஜ்ஜத்' நேரம் வந்தவுடன் எழுந்து குளித்து விட்டு தொழுதுவிட்டு தியானத்தில் இருப்பார்கள். பின்னர் பஜ்ர் தொழுவார்கள். பிறகு இறை சிந்தனையில் அமர்ந்து விட்டு இஷ்ராக் தொழுதுவிட்டு பள்ளியிலிருந்து வெளியே வருவார்கள்.

இதற்கிடையில் திருக்குர்ஆனையும் ஓதிவர தவறமாட்டார்கள். அப்போது அவர்கள் கண்களிலிருந்து நீர் வழிந்தோடும்.

"நீரா லொலித்தோட நெஞ்சகத்தும் கண்ணிடத்தும்
கோராற்றினால் எளியோர் கொள்ளும் துயர் போக்குமையா"

என்று புலவர் நாயகம் சேகனாப் புலவர் பாடியிருப்பது தம் நிலையை முன்கூட்டி உணர்ந்திருக்கிறார்கள். என்றும் கூறுவார்கள்.

வியாபாரத்தில் தாராளத் தன்மையுடனும் ஏழை எளியவர்களிடத்து ஈகை மனதுடனும் நடந்து கொள்வார்கள். தம்மிடம் கடன் பெற்றவர்களிடம் அதைக் கசக்ப் பிழியாமல் தர்ம கணக்கில் எழுதி விடுவார்கள்.

நாகூர் பாதுஷா நாயகம் கல்வத்து நாயகம் அவர்கள் கனவில் தோன்றி திருக்கலிமாவை மட்டும் போதித்து விட்டு மறைந்து விட்டார்கள். பைஅத் ஏதும் கொடுக்கவில்லை.

நாட்கள் உருண்டோடின. செய்யிது யஹ்யா மௌலானா அவர்கள் கீழக்கரை வந்திருந்தார்கள். அவர்களை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் மிகவும் உபசரித்துப் போற்றினார்கள். கல்வத்து நாயகம் அவர்களும் மௌலானா அவர்களிடம் மிகுந்த மரியாதையுடன் பணிந்து பைஅத் கேட்டார்கள். ஆனால் அவர்கள் அவர்களுக்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதிய 'இஹ்யா உலூமித்தீன்!' என்னும் நூலை அவர்கள் கையில் கொடுத்து, "அன யஹ்யா ஃபகுத் இஹ்யா அஹ்யல்லாஹு ஃஆதக" (நான் யஹ்யா, இந்த இஹ்யா உலூமித்தீனைப் பற்றிப் பிடியுங்கள்)

இதுவே தங்களுக்கு நான் செய்யும் இறைஞ்சுதல். இதனைத் தாங்கள் ஓதி ஆராய்ந்துவர அல்லாஹ் தங்கள் அறிவுக்குப் புத்துயிர் வழங்குவான் என்று வாழ்த்தி அனுப்பிவிட்டார்கள்.

அந்த நூலைப் பெற்ற அடுத்த கணத்தில் இருந்து இந்த நூலிலேயே மூழ்கித் திளைத்தார்கள். 'இஹ்யா' நூல் அதன் பெயருக்கேற்ப அவர்களின் மனதைப் பண்படுத்தியது. புத்துயிர் ஊட்டியது. எந்த நூலாலும் தீர்க்கப்படாத அவர்களின் அறிவு தாகம் அந்த நூலால் சற்றே தணிந்தது. அந்த நூல் அவர்கள் மனதில் ஆழப் பதிந்து விட்டது.

செய்யிது யஹ்யா மௌலானா அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பு அவர்களிருவரையும் அடிக்கடி சந்தித்துக் கொள்ள வைத்தது. மௌலானா அவர்கள் கல்வத்து நாயகம் அவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் படி கூறினார்கள். ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னாவைப் பின்பற்றுங்கள் என்றார்கள். மௌலானா அவர்களின் உத்திரவுக்குக் கட்டுப்பட்டு திருமணத்திற்குச் சம்மதித்தார்கள்.

*(வலம் வருவார்கள்)*

## ஹள்ரத்

# நிஜாமுத்தீன் அவ்லியா (ரலி)

காஜா அவர்களும் தம் ஆன்மீக முன்னோர்கள் போன்று அரசவையை விட்டும் ஒதுங்கியே வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் டில்லி வந்து ஆன்மீகச் செங்கோலோச்சத் தொடங்கிய காலத்திலிருந்து அவர்கள் நிர்யாணமடையும் வரையில் ஏழு அரசர்களை டில்லிமாநகரம் கண்டது. அவர்களில் சிலர் பெருமைக்காரர்களாகவும் கர்விகளாகவும் இருந்தனர். வேறுசிலர் சீருடனும் சிறப்புடனும் ஆட்சி செய்தார்கள்.

பல்பனில் ஆட்சியின்போது காஜா அவர்கள் பிரபல்யம் பெறவில்லை. அவருக்குப்பின் டில்லி அரியணை ஏறிய கைக்குபாதோ கேளிக்கைகளிலும் வேட்டையாடுவதிலும் தம் பொழுதைப் போக்கி வந்ததால் அவர் காஜா அவர்கள் மீது கவனம் செலுத்தவில்லை. அவருக்குப் பின் அரசுகட்டிலில் ஏறிய ஜலாலுத்தீன் கில்ஜியோ ஓர் அறிஞராகவும் அறிஞர்களைப் புரக்கும் ஆர்வலராகவும் இருந்தார். அப்பொழுது காஜா அவர்கள் புகழேணியின் உச்சியில் வீற்றிருந்தனர். அவர்களின் ஆன்மீக ஒளிச்சுடர் சுல்தான் ஜலாலுத்தீன் கில்ஜியின் கண்களைக் கூசச் செய்தது. எனவே ஆன்றோரையும் சான்றோரையும் அறிஞர்களையும் ஆதரிக்கும் தம் வழக்கத்திற்கேற்ப அவர் தம் அரசவைப் பிரமுகர்களில் ஒருவரான முஹம்மது சாஹிப் என்பவர் மூலமாக ஐம்பதாயிரம் பொற்காசுகளை அன்புக் காணிக்கையாக அனுப்பி வைத்தார் காஜாவின் சமுகத்திற்கு.

அப்பொழுது காஜா அவர்கள் தம் ஆன்மீக மாணவர்களுக்கு ஆன்மீகத் துறையில் அவர்களுக்கேற்பட்ட பல ஐயங்களுக்குத் தெளிவான விளக்கம் கூறிக் கொண்டிருந்தனர். அரசரின் காணிக்கை வந்ததும் அதனை ஏறிட்டுப் பார்த்த “நான் இப்பொழுது அரசரின் காணிக்கைபால் கவனம் செலுத்தவா! அல்லது ஆன்மீக ஐயச் சகதியில் கிடந்து உழன்று கொண்டிருக்கும் உங்களை அதிலிருந்தும் கை தூக்கி விடவா?” என்று வினவினர். அதற்கு அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் “அரச காணிக்கையைவிட எங்களின் ஐயம் நீக்கி அவலம் போக்குவதே மாண்புடைத்ததாகும்” என்று கூறினர். காஜா அவர்களும் அவ்விதமே செய்தார்கள்.

இச்செய்தி சுல்தான் ஜலாலுத்தீன் கில்ஜியின் செவிப் போந்ததும் அவருக்குக் காஜா அவர்கள் மீதிருந்த மதிப்பு பன்மடங்கு அதிகமாயிற்று, அவர்களைக் காண வேண்டுமென்ற பேரவா உந்த அவர் தம் உள்ளக்கிடக்கையைத் தூதுவர் மூலம் காஜா அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். ஆனால் காஜா அவர்களோ தாம் அவரைக் காண விரும்பவில்லை என்றும், தாம் ஒரு பக்கீர் தாம் என்றும், அரசர்களைத் தாம் காணச் செல்வதோ அல்லது அரசர்கள் தம்மைக் காண வருவதை அனுமதிப்பதோ ஒரு பக்கீருக்கு அழகல்லவென்றும் கூறிவிட்டார்கள். எனினும் மனம் தளராது சுல்தான் ஜலாலுத்தீன் கில்ஜி, காஜா அவர்களைத் தரிசிக்கப் பல தடவை முயன்றார். எனினும் முடியாது போயிற்று.

இப்பொழுது சுல்தானின் மூளை வேகமாக வேலை செய்தது. காஜா அவர்களின் அத்தியந்த ஆன்மீக மாணவரும் தம் அரசவைப் பிரமுகருமான அமீர் குஸ்ருவை வரவழைத்து அவரிடம் இதுபற்றி ஆலோசனை கலந்தார். தம்மை எவ்வாற்றானும் காஜாவின் திருமமுன் கொண்டு போய்ச் சேர்த்து விடுமாறு அவர் அமீர் குஸ்ருவைப் பெரிதும் வேண்டிக் கொண்டார். அமீர் குஸ்ருவும் அதற்கு ஒருவாறு இணங்கினார்.

அமீர் குஸ்ரு, சுல்தானை காஜாவின் திருமுன் அழைத்துச் செல்வது என்றும் இதுபற்றி எவருக்கும் தெரியக் கூடாதென்றும் காஜா அவர்களுக்கும் தெரியப்படுத்தக் கூடாதென்றும் இரகசியமாகத் திட்டம் தீட்டப் பட்டது.

ஆனால் பின்னர் அமீர் குஸ்ருவின் உள்மனம் அவரை உந்தலாயிற்று. சுல்தானைச் சந்திப்பதைக் காஜா அவர்கள் விரும்பாத பொழுது அதற்கு விரோதமாக சுல்தானைக் காஜா அவர்களின் திருமுன் இரகசியமாக அழைத்துச் செல்வது காஜா அவர்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகம் என்று அது எச்சரித்தது. எனவே அவர் இச்செய்தியைக் காஜா அவர்களிடம் இதமாக எடுத்துரைத்து அவர்களின் இணக்கத்தைப் பெறும் நோக்கத்துடன் அவர் காஜா அவர்களிடம் சுல்தானின் விருப்பத்தை எடுத்துரைத்தார். அதுகேட்ட காஜா அவர்கள் அடுத்தகணமே தம் ஆன்மீக ஆசான் பாபா ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் அடங்கப் பெற்றுள்ள அஜுதனுக்குப புறப்படத் தயாராகி விட்டனர்.

இச்செய்தி சுல்தானுக்குத் தெரிய வந்ததும் அவர் அமீர் குஸ்ருவை அழைத்து வரச் செய்து இரகசியத்தை வெளியாக்கிவிட்டதற்காக அவரைப் பெரிதும் சினந்து கொண்டார். அதற்கு அவர் கூறிய பதில்: “சுல்தான் அவர்களே! தங்களின் சினத்தின் காரணமாக என் உயிர் போயினும் போகலாம், ஆனால் என் ஆசான் சினந்தால் என் ஈமானே (இறை நம்பிக்கையே) பறிபோய்விடுமே” என்பதாக இருந்தது. அதுகேட்டு சுல்தான் மறு வார்த்தை பேசவில்லை.

சுல்தான் ஜலாலுத்தீன் கில்ஜிக்குப்பின் அரியணை ஏறிய சுல்தான் ‘இரண்டாவது சிகந்தர்’ என்று பிரகடனப்படுத்திக் கொண்டு பெருமையுடன் ஆட்சி செய்து வந்தார். அவர் துவக்கத்தில் காஜா அவர்கள் மீது எவ்விதக் கவனமும் செலுத்தாதிருந்தார். ஆனால் கோள் சொல்பவர்கள் அவரை அணுகி “சுல்தான் அவர்களே! தங்களின் அரசில் மற்றொருவர் அரசாட்சி செய்கிறார். அதனைத் தாங்கள் அனுமதிப்பது தங்களுக்கு வினையாக ஆகிவிடும். ஆதலின் அதனை இப்பொழுதே வேரறக் கிள்ளி வீசி எறிந்து வெந்நீரும் ஊற்றிவிட வேண்டும்” என்று கூறினர் “யார் அவர்?” என்று வினவினார் சுல்தான். “காஜா நிஜாமுத்தீன்” என்று காதோடு காதாகக் கூறினார்கள் அவர்கள்.

கோளர்கள் கூறிய குண்டுணிச் செய்தியை சுல்தான் அலாவுத்தீனின் செவிகள் ஏற்றுக் கொண்டனவே தவிர மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் உண்மையை அறிய எண்ணி அவர் காஜா அவர்களுக்கு ஒரு மடல் எழுதினார். அதில் அவர் தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறும் அரசாங்கத்தை நடத்துவதுபற்றி தமக்கு அவ்வப்போது அறிவுரை பகருமாறும் வேண்டிக் கொண்டிருந்தார். இம்மடலைத் தம் மகனும் பட்டத்திளவரசருமான கிதுர்கான் மூலமாகக் காஜா அவர்களுக்கு அனுப்பி வைத்தார் அவர்.

அம்மடல் காஜா அவர்களின் கைக்குக் கிடைத்ததும் அவர்கள் அதனை பிரித்துக் கூடப் பார்க்காது தம்மைச் சூழ இருந்தவர்களை நோக்கி, “நான் சுல்தானுக்காக இறைவனிடம் இறைஞ்சுகின்றேன். நானோ ஒரு பக்கீர். சுல்தானுக்கும் எனக்கும் என்ன தொடர்பிருக்கிறது, இவ்வுலகைத் துறந்து மூலையில் அடங்கி ஒடுங்கி சுல்தானுடையவும் முஸ்லிம்களுடையவும் நல்வாழ்விற்காக இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டிருக்கிறேன். தம் அரசில் வீற்றிருந்து நாம் அதைக் கூடச் செய்யக்கூடாது என்று சுல்தான் எண்ணுவாராயின் நான் இக்கணமே இவ்விடத்தைவிட்டு அகன்று வேறோர் இடத்திற்குச் சென்றுவிடுகிறேன். அல்லாஹ்வுடைய பூமியோ மிகவும் விசாலமானதாகும்.” என்று கூறினர்.

இச்செய்தியைச் செவியேந்தி கிதுர்கான் தம் தந்தையிடம் சமர்ப்பித்ததும் சுல்மான் அலாவுத்தீன் கில்ஜிக்கு ஏற்பட்ட வெஞ்சினத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. “காஜா அவர்கள் அரசாங்க விஷயம் பற்றி அக்கரை செலுத்தாதவர்கள் என்பது ஏற்கனவே எனக்குத் தெரியும். ஆனால் கோளர்கள் எனக்கும் அவர்களுக்கும் இடையே முடிச்சுப் போட்டு இந்த அரசாங்கத்தையே நாசப்படுத்த சதி சூழ்ந்தனர். அவர்களின் சதி தோல்வியுற்றது” என்று கூறினார்.

இதன்பின் கோளர்களைத் தண்டித்ததுடன் காஜா அவர்களுக்கு மறுமடல் தீட்டி தாம் அவர்கள் மீது கொண்டிருக்கும் அன்பையும் பக்தியையும் அறிவித்ததோடு

தம்மை மன்னித்து ஆட்கொள்ளுமாறும் வேண்டிக் கொண்டார். மேலும் அம்மடலில் தாம் அவர்களை வந்து காண அனுமதி வழங்கவேண்டுமென்றும் விழைந்து நின்றார்.

அதற்கு காஜா அவர்கள், "சுல்தான் இங்கு வருவதை நான் விரும்பவில்லை. அவருக்காக நான் இறைவனிடம் மறைமுகமாக இறைஞ்சிக் கொண்டிருப்பேன். அவரின் முன்னிலையில் அவருக்காக இறைவனிடம் இறைஞ்சுவதைவிட அவரில்லாத பொழுது அவருக்காக இறைவனிடம் இறைஞ்சுவதே மிகவும் பயன்தர வல்லதாகும்" என்று பதில் அனுப்பி வைத்தார்கள்.

எனினும் இந்த பதில் காஜா அவர்களைக் காண வேண்டுமென்று அவர் கொண்டிருந்த இதய தாகத்தை அதிகப்படுத்தியதே ஒழியக் குறைக்கவில்லை. அவர்களைத் தரிசிக்க தமக்கு அனுமதி வழங்கவேண்டுமென்று மிகவும் மரியாதையுடன் மீண்டும் அவருக்கு காஜா அவர்களிடமிருந்து முன்பு போன்றே பதில் வந்தது. எனினும் சுல்தான் மனம் தளரவில்லை. மீண்டும் மீண்டும் தம் வேணவாவை எடுத்துரைத்து மடலுக்கு மேல் மடல் தீட்டிக் ெண்டிருந்தார்.

சுல்தானின் இத்தகு மடல்கண்டு, கண்டு காஜா அவர்களுக்கும் அலுத்துப் போய்விட்டது. எனவே அவர்கள் சுல்தானுக்கு எழுதிய இறுதி மடலில் "என் இல்லத்திற்கு இரண்டு வாயில்கள் உள்ளன. ஒரு வாயில் வழியாக சுல்தான் என் இல்லத்தில் நுழைவாராயின் நான் அக்கணமே மறுவாயில் வழியாக வெளியேறிவிடுவேன்" என்று முத்தாய்ப்பு வைத்து விட்டார்கள். அத்துடன் அப்பிரச்சினை முடிவுற்றது.

இச்சமயத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி, வாரங்கல் மீது மாலிக் காஃபூரின் தலைமையில் ஒருபடையை அனுப்பிவைத்திருந்தார். நாற்பது நாட்களுக்கு மேலாகியும் மாலிக் காஃபூரிடமிருந்து அவருக்கு எத்தகைய தகவலும் வரவில்லை. அதனால் பெரிதும் வருந்திய சுல்தான், தம் அரசவைப் பிரமுகர்களான மாலிக் கரா பேகையும் காஜி முஹீதுத்தீனையும் காஜா அவர்களிடம் அனுப்பிவைத்துத் தம் மனக்கவலையை எடுத்துரைத்து 'துஆ'ச் செய்யுமாறு வேண்டி நின்றார்.

அவ்வாறே அவர்கள் இருவரும் காஜா அவர்களை அணுகி, செய்தியை எடுத்துரைத்த பொழுது முன்னர் அலாவுத்தீன் அடைந்த வெற்றிகளையெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாக எடுத்துரைத்து வந்த காஜா அவர்கள், சற்று நேரம் தாமதித்து, "நாம் இனிமேல் அடையப் போகும் வெற்றிகளுடன் அவற்றை ஒப்பு நோக்கின் அவை ஒன்றுமே இல்லை" என்று கூறி முடித்தனர்.

இச்செய்தி சுல்தானின் செவிப்போந்ததும் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. அன்று மாலை (அஸர்) தொழுகைக்குப்பின் வாரங்கல் வெற்றிகொள்ளப்பட்ட செய்தியை மாலிக் காஃபூரின் தூதுவன், சுல்தானிடம் கொண்டு வந்து சேர்த்த பொழுது அவருடைய உள்ளம் வெற்றி மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தது. காஜா அவர்கள் மீது அவர் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகியது.

காஜா அவர்களுக்கு அன்புக் காணிக்கையாக ஐயாயிரம் பொற்காசுகளை கரா பேக் மூலமாக அனுப்பிவைத்தார் சுல்தான். அப்பொழுது அங்கு வீற்றிருந்த குராஸான் நாட்டைச் சேர்ந்த கலந்தர் ஒருவர் "காணிக்கையில் எனக்கும் பங்குண்டு" என்று முந்திரிக் கொட்டை போன்று முன்வந்து கூறினார். அதுகேட்ட முறுவலித்த காஜா அவர்கள், "பங்கு என்ன? எல்லாமுமே ஒருவருக்குக் கிடைத்தால் மிகவும் பயனுடைத்ததாயிருக்கும்" என்று கூறி அந்த ஐயாயிரம் பொற்காசுகளையும் அவருக்கே அன்பளிப்பாக வழங்கி விட்டார்கள்.

இதன்பின் மங்கோலியர்கள் இந்தியாவின் மீது படையெடுத்த பொழுது அவர்களை முறியடிக்கப் பெரும் படையுடன் சுல்தானே தலைமை தாங்கி முன் சென்றார். செல்லுமுன் வெற்றிக்கு இறைஞ்சுமாறு ஒரு தூதுவர் மூலம்காஜா அவர்களுக்குச் சொல்லி அனுப்பினார் அவர். காஜா அவர்கள் அவ்விதமே தாமும் செய்ததோடு தம் தவமடத்திலிருந்த அனைவருக்கும் சுல்தான் வெற்றியுடன் திரும்பிவர இறைவனிடம் இறைஞ்சுமாறு அருட்கட்டளை பிறப்பித்தார்கள். பலன்; சுல்தான் மங்கோலியர்களைப் புறமுதுகிட்டோடச் செய்து வெற்றி முரசுடன் டில்லி திரும்பினார். இந்தியாவில் முஸ்லிம் பேரரசு அநாகரிக மங்கோலியர்களின் கொடும்பிடியிலிருந்து இறையருளால் காப்பாற்றப்பட்டது.

---

*தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவின் மூலவர் குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் நாயகம்மௌலானா (ரலி) அவர்களின் திருமண விருந்து அழைப்பிதழ்.*


ஹூவல்கரீம்.

திருமிதன் கான்முகோயாஞ் செய்யதியாசீன்
[illegible]
[illegible]
சேக்குபரீத் [illegible]

அன்புடையீர், [illegible] ஹிஜரி 1340 [illegible] 26உ (26—12—21) [illegible] அவர்கள் புதல்வர் செய்யத்யாசீன்மௌலானா அவர்களுக்கும், என் புதல்விக்கும் [illegible]

திருமுல்லைவாசல் 23—12—1921 J. S. Majid Ali Mowlana இக்கணம்,

கதிபு. ம. வு. செய்குபரீத்[illegible]

[illegible]

ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை



# வஹ்தத்துல் வுஜுத்

H.ஜஉபர் சாதிக் ஹக்கிய்யுல் காதிரிய் –மதுக்கூர் (கேம்ப் ) அபுதாபி

**முன்னுரை:**

என்ற மூல உண்மையை உரக்கக் கூறி அகிலத்தாரை அறிவுடையோராய் ஆக்குவதே வஹ்தத்துல் வுஜுத் அல்லது ஒரே உள்ளமை எனும் பேருண்மையாகும். இதனை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். **வஹ்தத்** என்றால் ஒன்று என்றும், **வுஜுத்** என்றால் உள்ளமை அல்லது தன்னில் தானானது எனப் பொருள் கொள்வது சாலச்சிறந்ததாகும். வஹ்தத்துல் வுஜுத் என்றால் ஏக காட்சி அல்லது ஏக உள்ளமை என்பதாகும். அது வேறொன்றிலிருந்து ஆகவில்லையென்பதும் முக்கால வேறுபாடின்றி எக்காலமும் குறைமிகையின்றி நிறைந்திருந்தது என்பதும் உணர்வுடையோருக்குத் தெளிவாகும்.

**கருத்துரை:**

**வஹ்தத்துல் வுஜுத் கோட்பாடு புதிதல்ல:**

இறையோன் (மறைபொருளாய் இருந்த) தன்னை அறிய நாடி எப்பொழுது வெளியாகினானோ அப்பொழுதே வஹ்தத்துல் வுஜுதெனும் ஏக சித்தாந்தம் உதயமாகிவிட்டது. அவனுக்கு முன்னால் எதுவும் இல்லையெனும் ஏக ஆதி நிலையாகிய இருப்பிலிருந்து அதனுள், அதுவாய், அதுவாகவே வெளியாகியதே வஹ்தத்துல் வுஜுத் ஆகும்.

வெளியாக நாடியதும், வெளியானதும் அதுவேயாதலால் இருப்பது இரண்டல்ல. ஒன்றேயாகும். இந்த உண்மையை உணர்ந்தோர் வஹ்தத்துல் வுஜுத் புதிதல்ல எனபதை உணர்ந்து தன் சுயமும், ஏக சுயமும் ஒன்றே என்பதை உணர்ந்து ஆத்ம சுகம் அடைவர். வஹ்தத்துல் வுஜுத் என்ற மூலச்சொற்கள் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரலி) அவர்களின் காலத்திலிருந்து மக்கள் மத்தியில் பிரபல்யமாக தொடங்கியது.

**வஹ்தத்துல் வுஜுதென்னும் பூரணத் தோற்றம்:**

ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் தாகி பிரபத்தில் முதன் முதலில் நீர்

எங்கிருந்தீர் எனும் இறை கேட்டலுக்கு, இறைவா, நீ, சூக்குமமாய் மறைந்து நான், நீ **யென்றன்றி** இல்லாதிருந்த நிலையிலிருந்த போது தான் உன்னுடன் கலந்திருந்தேன் எனும் விடுத்தலில் வஹ்தத்துல் வுஜூத் எனும் ஒரே உள்ளமையை காணலாம். இந்த நிலையே இன்றும் காணப்படுகிறது. இதுவே பூரணத் தோற்றமாகும். தோற்றங்கள் பலவாகினும் **தோற்றம்** பெற்றது ஒன்றே. கடலிலிருந்து அலை வெளியாகின்றது. அதாவது கடல்தான் அலையாக மாற்றம் பெற்று, அது அலையென்ற நாமத்தை அடைகின்றது. இதனால் கடலை தனியாகவோ, அலையை தனியாகவோ பார்க்க இயலாது. கடல்தான் அலையாக மாறியது என்பதை சிந்தனை கொண்டு பார்க்கும் பொழுது ஆங்கே வஹ்தத்துல் வுஜூத் எனும் இரண்டற்ற நிலையை விளங்கிக் கொள்ளலாம்.

மேலும் தாகி பிரபத்தில் நானேயல்லாது பிறிதொன்றையும் காணாது நானே என்னில் என்னைக் கண்ட நிலை. மற்றும் உன்னில் நான் அழிந்து உன்னில் நானாய்ப் பிறிதொன்றிலாதாகி உன்னிலே என்னை நீயாக இரண்டறக் கண்ட நிலையில் ஏகாந்த நிலையை காணலாம். இதுவும் வஹ்தத்துல் வுஜூதெனும் மூல உண்மையை தெளிவுபடுத்துகிறது.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பூர்வீகத்தை சிந்திக்க வேண்டும். நான் யார்?, நான் எவ்வாறு, எங்கிருந்து வெளியானேன்? என்பதை சிந்திக்கும் பொழுது அவன் சூழ இருக்கும் வஸ்துக்களிலிருந்துதான் வெளியானான் என்பதை விளங்கிக் கொள்வான். எல்லா வஸ்துக்களும் பிரபஞ்சத்திற்கு அப்பால் இல்லை. இந்தப் பிரபஞ்சமும் எந்த வஸ்துக்களுக்கும் அயலாக இல்லை. ஆக, ஒவ்வொரு வஸ்தும் அல்லது ஒவ்வொரு வெளிப்பாடும் பிரபஞ்சத்தின் ஒரு பகுதிதான் என்பதை நாம் உணர முடியும். இந்த உண்மைதான் **வஹ்தத்துல் வுஜூதாகும்**. இந்த நிலையை உணர்ந்தவன் இருப்பது இரண்டெனும் துவித நிலையாகிய அசுத்த நிலையை விட்டும் நீங்கி, இருப்பதும்– காண்பதுமாகிய யாவும் ஒன்றெனும் **அத்வைத நிலையையடைந்து பரிசுத்தமாகின்றான்.**

**(வஹ்தத்துல் வுஜூதின் படித்தரம்– உதாரணங்கள்)**

**ஏக ஏகநிலையானது, தேக நிலையடைதல்**

(வுஜூத்) உள்ளமைப்பொருளாகிய இது மவ்ஜூத் எனும் பிரபஞ்சமாக அல்லது சிருஷ்டிப் பொருள்களாக கீழ்வருமாறு மாற்றங்கொண்டது.

அஹதிய்யத் (உதாரணம் : கடல்),

வஹ்தத் (உதாரணம் : கடல்– அலை),

வாஹிதிய்யத் (உதாரணம் : நீர்– நீர்க்குமிழ்),

ஆலமுல் அர்வாஹ் (உதாரணம் : நீர்– பனிக்கட்டி),

ஆலமுல் மிதால் (உதாரணம் : ஆகாயம்– புகை),

ஆலமுல் அஜ்ஸாம் (உதாரணம் : நெருப்பு– இரும்பு),

ஆலமுல் இன்ஸான் (உதாரணம் : ஆகாயம்– மேகம்)

என்னும் ஏழுபடித்தரங்கள் உள்ளன. மேற்கண்ட உதாரணங்களைக் கொண்டு முதல் நிலையானது படித்தரங்களைக் கடந்தாலும் அதன் முழுநிலையாகிய **அமாவெனும்** பூர்வீகத் தன்மை என்றும் மாறவில்லை. அது முன்னிருந்ததை போன்றே இப்பொழுதும் உள்ளது என்பதாகும்.

**ஞானபாஷைகளில் வஹ்தத்துல் வுஜூத்:**

(அந்த) வுஜூதாகிய உள்ளமைக்கு உருவம் என்பதோ, எல்லையோ, மட்டோ இருக்கவில்லை. இது அரு நிலையாகும். தன்ஸீஹாகும் (தூயது). இஃதுடனே (இது தன்னிலிருந்தே, இதுவே) உருவம், எல்லை என்பவைகள் கொண்டும் (பெயர்கள் கெண்டும் பண்புகள் அல்லது வருணனைகள் கொண்டும்) வெளியாகித் தோன்றிற்று. இது உரு நிலையாகும். தஷ்பீஹாகும் (நிகரனது). இந்த அருவுரு **(தன்ஸீஹ் மஹ்ள்)** நிலையே பூரணமாகும். முழுமையானதாகும். (தென்படாது) அருவாக விளங்கிய வுஜூது **தன்னிற்றானே மாற்றமடைந்து** ஐம்பூதங்களாகவும் அவற்றுள்ளிருந்தே எண்ணற்ற உருவங்களாகவும் காட்சி கொடுத்தது. பரிபூரண ஹக்காகும் அல்லது பிரபஞ்சமாகும். இதை அறிவதே– உணர்வதே வஹ்தத்துல் வுஜூதாகும்.

இந்த வஹ்தத்துல் வுஜூத் ஞானத்தை அத்வைத ஞானம் என்றும் ஞான பரிபாஷைகளில் அழைப்பர். துவைதம் என்றால் சமஸ்கிருதத்தில் இரண்டு என்று பொருள். அத்வைதம் என்றால் அ+த்வைதம், இரண்டில்லாதது என்று பொருள். அதாவது இறையும் (பரமாத்மா), இறைத்தோன்றலும் (சீவாத்மா) ஒன்றே என்பதாகும். சீவாத்மாவுக்கு தனித்த இருப்பு அல்லது உள்ளமை இல்லை. அது பரமாத்மாவின் ஒரு வெளிப்பாடாக, (நிரந்தரமற்ற) காட்சியாக காணப்படுகிது. இந்த காட்சிக்கு ஆரம்ப– முடிவு என்கின்ற நிலையுண்டு. ஆனால் பரமாத்மாவோ என்றும்நிலையானது– இணையில்லாதது– முடிவில்லாதது. உலகத்தின் பல்வேறு

தோற்றங்களை மாயை என்று அத்வைதம் சொல்கிறது. அத்வைதத்தின் படி நான், நீ, இன்னொருவன், ஜீவாத்மா போன்ற பேதங்கள் மாயையினால் ஏற்படுகின்றன. **உண்மையில் எல்லாமே பிரம்மம் தான்.**

திரைப்படம் பார்க்கையில் திரையில் பலவிதமான காட்சிகள் பார்க்கிறோம். வீடு, நகரம், மனிதர்கள், விலங்குகள் இயற்கைக் காட்சிகள் என வித விதமாய் காட்சிகள் தெளிவாக நம் கண் முன்னால் தெரிகிறது. ஆனால் அந்தக் காட்சிகள் உண்மையா? எத்தனை தெளிவாகக் காட்சிகள் தெரிந்தாலும் அந்தக் காட்சிகளில் எத்தனை விதமான செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் உண்மையாக அங்கே இருப்பது ஒரு வெள்ளைத் திரை மட்டுமே அல்லவா? அந்த வெள்ளைத் திரை தான் பிரம்மம். பல விதமான காட்சிகள் தெரிவதும், செயல்கள் நடைபெறுவதாகத் தெரிவதும் வெறும் தோற்றமே அல்லவா? அப்படித் தோற்றத்தை ஏற்படுத்துவது மாயை. எப்போதும் நிலைத்து இருப்பது பிரம்மம் மாத்திரமே என்கிறது அத்வைதம். இதுதான் **வஹ்தத்துல் வுஜூத்** என்று அழைக்கப்படுகிறது. சுட்டிக்காட்டும் மொழிகள்தான் வேறொழிய மூலக்கருத்து ஒன்றுதான்.

**நபிமொழிகளில் வஹ்தத்துல் வுஜூத்:**

தன்னை அறிந்தவன் தன் ரப்பை (இறைவனை) அறிந்தான் என்பது நபிகளாரின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவாக்கு. இங்குத் தன்னை அறிந்தவனே ஹக்கை (இறைவனை) அறிகிறான். அப்போது அவன் ஹக்கிலிருந்து பிரிந்தவன் அல்லன் என்பதைப் பூரணமாய் ஒப்புக் கொள்கிறான். தன் வுஜூதையும், ஹக்கின் வுஜூதையும் ஒன்றென அறிகின்றான். அப்பொழுது ஹக்கோடு சம்பந்தப்படுகிறான். **எஜமானாகிறான்**. தன்னை அறியாதவன் அல்லது தான் யார் என்று சிந்திக்க மறுப்பவன் அல்லது தயங்குபவன். ஏனைய மிருகங்கள் தன்னையறிந்த அளவாவது அறியாதுள்ளான். மறுப்பவன் அல்லது தயங்குபவன் அல்லது அறியாதவனது உள்ரங்கம் ஹக்காவே இருந்த போதும் அவன் **அப்தாகிவிடுகிறான்.**

ஜிப்ரீல் (அலை) நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் இஹ்ஸான் என்றால் என்ன? என்று கேட்ட போது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் இறைவனை பார்த்துக்கொண்டு இருப்பது போன்ற உணர்வில் வணங்குவது அல்லது இறைவன் தன்னை பார்த்துக்கொண்டு இருக்கிறான் என்ற உணர்வில் வணங்குவது என்று அருளினார்கள். இதன் மூலம் நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம் இஹ்ஸான்

என்பது உணரும் அறிவு என்று. இப்போது விடயத்திற்கு வருவோம், வஹ்ததுல் வுஜூத் என்றால் உள்ளமை ஒன்று. அதாவது இறைவன் ஒருவன் என்பதை அறிந்து உணரும் கல்விக்கே **வஹ்தத்துல் வுஜூத்** என்று கூறப்படும்.

நீங்கள் கிணற்றில் நீரை இறைக்க ஒரு பாத்திரத்தை அக்கிணற்றினுள் செலுத்தினீர்கள் என்றால் அது அல்லாஹ்வில்தான் விழும் என்ற நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ். தோற்றங்கள் யாவும் ஹக்கின் பகுதிகளே என்ற உண்மையும், அதே நேரத்தில் எந்தத் தனித்த ஒன்றையும் பரிபூரணமானது என்று கூறவியலாது என்ற உண்மையை விளங்கலாம். இதுவெல்லாம் வஹ்தத்துல் வுஜூத் என்பதற்கு ஆதாரங்களாகும்.

**நபித்தோழர்கள், இறைநேசர்கள் போதிக்கும் வஹ்ததுல் வுஜூத்:**

நான் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் பார்க்கவில்லை, என் உள்ளே இருக்கிற விஷயத்தை நான் வெளியிடுவேனானால், ஆழமான கிணற்றில் விடப்பட்ட கயிறு துடிப்பதை போன்று நீங்களும் துடிப்பீர்கள். **– இமாம் அலி (ரலி).**

உலகம் கானல் நீர்போன்றது. அது யதார்த்தத்தில் ஹக்காகும். இந்த உண்மையைத் தெரிந்துகொண்டவர் தரீக்காவின் ரகசியத்தைப் புரிந்து கொண்டவராவார். இந்த உலகம் வெளித் தோற்றத்தில் பல உருவங்களையும் தோற்றங்களையும் உடையதாக இருந்தாலும், யதார்த்தத்தில் சந்தேகமின்றி அது ஹக்காகவே இருக்கின்றது. உருவம் என்பது திரை. அத்திரையில் மாட்டினவன் அவ்வுருவத்தில் தோற்றுபவனைப் புரிந்து கொள்ளமாட்டான்

**– முஹ்யித்தீன் இப்னு அரபி (ரலி).**

அல்லாஹ், தன்னையே வணங்குவோனும், வணங்கப்படுவோனும் ஆவான்

**– முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி).**

அகப் பார்வையுடைய ஞானக் கண்ணானது ஒளி பெற்றதாக இருந்தால், அது எந்தத் திசையை நோக்கினாலும் அவனது தோற்றத்தையே காணும்.

**– அஜ்மீர் ஹாஜா நாயகம்.**

எல்லாம் அவனுடைய ஒளிதான், எல்லாம் அவனே, அவன் அல்லாததற்கு எந்த ஒரு எதார்த்தமும் இல்லை. **– இமாம் கஸ்ஸாலி (ரலி).**

நிச்சயமாக அவனே எல்லாம். உள்ளமையில் அவனுக்கு வேறான எதுவுமில்லை – **இமாம் கஸ்ஸாலி (ரலி).** *(தொடர்ச்சி 34 ஆம் பக்கம் பார்க்க)*

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

எங்கும் நிறைந்த அல்லாஹ்வின் திருவருளாலும், ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும், அன்னவர்களின் திருப்பேரர் **குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் நல்லாசியாலும் நிகழும் **ஹிஜ்ரீ 1443- ம் ஆண்டு** ரஜப் மாதம் பிறை **(02,02.2022)** புதன்கிழமை மாலை வியாழன் இரவு 8 மணி அளவில்

பட்டுக்கோட்டை மர்ஹூம். காதர் பாட்சா, ஜனாப். ஓ.பி.யு. **அப்துல் ரெஜாக்** ஹக்கிய்யுல் காதிரிய், இவர்களின் பேத்தியும்,

ஜனாப்.கே.நத்தர்ா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் அன்பு மகளுமாகிய தீன்குலச் செல்வி

**N. பஸீஹா B.B.A.,** ஹக்கிய்யுல் காதிரிய்

மணாளிக்கும்

மதுக்கூர் மர்ஹூம் எம்.எம். முகம்மது அப்துல்லா,மர்ஹூம் ஏ.எஸ். முகம்மது யாக்கூப் இவர்களின்பேரனும்,
ஜனாப். எம்.எம்.ஏ. முகம்மது உசேன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் அன்பு மகனுமாகிய தீன் குலச்செல்வன்

**Er. M. முகம்மது இம்ரான் B.Tech.,** ஹக்கிய்யுல் காதிரிய்

மணாளருக்கும்

இன்ஷாஅல்லாஹ் நிக்காஹ் செய்வதாய் பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் மேற்படி திருமணம் மதுக்கூர் சிரமேல்குடிகாடு, **சிவக்கொல்லை *A.K.S.* திருமண மஹாலில்** மதியம் 12.30 மணியளவில் நடைபெறும் விருந்து உபசரிப்பிலும் மற்றும் இரவு 8.00 மணியளவில் பெரியார்நகர் **இடையக்காடு எனது இல்லத்தில் (தாருல்ஹிதாயா)** நடைபெறும் நிக்காஹ் மஜ்லிஸிலும் கலந்து கொண்டு சகல வைபவங்களுக்கும் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி துஆ செய்திட அன்புடன் அழைக்கின்றோம்.

*அவ்வண்ணமே கோரும்*

**ஜனாப்.O.P.U. அப்துல் ரஜாக் & குடும்பத்தினர்**

**CNA Stanford Hospital CA.USA**

**ஜனாப்.K.மதார்சா**

ஹக்கிய்யுல் காதிரிய் & குடும்பத்தினர்

*இணைந்து அழைக்கும்*

**A. அப்துல் ரஹீம்**
**CNA Stanford Hospital CA.USA**
**A.நூரு ஸரீஹா**
ஹக்கிய்யுல் காதிரிய்

**A.அப்துர்ரஹ்மான்**

*தங்களன்புள்ள,*

**K.நத்தர்சா** ஹக்கிய்யுல் காதிரிய்
**N. பாத்திமா நஜீஹா** ஹக்கிய்யுல் காதிரிய்
தாருல் ஹிதாயா இல்லம்
85/C, பெரியார் நகர், இடையக்காடு,
மதுக்கூர் - 614903
கைப்பேசி: **7868834964, 7373142877**

**சுற்றமும் - நட்பும்**

(31 ஆம் பக்கத் தொடர்ச்சி )

**வேதங்களில் வஹ்தத்துல் வுஜூத்:**

அனைத்து வேதங்களின் முடிவும், ஆழ்போதனையானதும் **இருப்பதொன்றே** என்பதாகும். தன்னையும், இறையையும் மனிதன் வேறாக சிந்திக்க தொடங்கிய காலத்திலிருந்தே அறியாமையைத் துடைத்தெறிய, இறைபோதகர்கள் **இறையைத்தவிர வேறான்றுமில்லை** எனும் பூரண அறிவை மானிட சமூகத்திற்கு வேதநூற்களாக வெளியாக்கி தந்தார்கள். பரிசுத்த அல்குர்ஆனில் இறையைத்தவிர வேறொன்றுமில்லை என்பதை கூறும் வசனங்கள் ஏராளம், ஏராளம். நாமும் காண்போமே!

(ஹகாஇகுஸ் ஸபா (பரமார்த்தத் தெளிவு) நூலிலிருந்து)

1. இறைவன் கிழக்கிலும், மேற்கிலும் இருக்கின்றான், ஆதலின் நீர் உமது முகத்தை எங்குத் திருப்பினும் அங்கு அல்லாஹ்வின் முகம் இருக்கின்றது. (இங்கு முகம் என்பது வுஜூத் என்னும் உள்ளமை)

2. நிச்சயமாக இறைவன் ஒவ்வொரு வஸ்துவையும் சூழ்ந்திருக்கின்றான்.

3. நாம் மனிதனுக்கு அவனுடைய பிடரி நரம்பை விட அதிக சமீபத்தில் இருக்கின்றோம்.

4. நீங்கள் எங்கிருந்தாலும் உங்களுடன் அவன் (அல்லாஹ்) இருக்கின்றான்.

5. நான் உங்கள் நப்ஸுகளிலே இருக்கின்றேன். ஆனால் நீங்கள் நோட்டமிடுவதில்லை.

6. அவனே முன்னவன், அவனே பின்னவன், அவனே வெளியீடானவன், அவனே உள்ளீடானவன். அவன் ஒவ்வொரு வஸ்தையும் அறிபவனாயிருக்கின்றான்.

7. நாம் அல்லா(ஹ்)விடமிருந்துள்ளவர்களே. மேலும் அவனிடமே நாம் மீள்கிறோம்.

மேற்கண்ட வேதவரிகள் மூலமாகிய இறைவனின் உள்ளமையைத்தான் குறித்து பேசுகிறதேயல்லாமல் இறை வெளிப்பாட்டைப் பற்றியல்ல என்பது தெளிவு. இது இருப்பது ஒரே உள்ளமையே எனும் வஹ்தத்துல் வுஜூதைப் பற்றி விளக்குகின்றது.

**முடிவுரை:**

நடைமுறை வாழ்வில் நாம் கூறுவோம், அதாவது ஒருவரைப் பார்த்து "உன்னைப் பார்த்து ஊரே மகிழ்கின்றது" என்று கூறினால் இங்கு ஊர் என்பது அங்கு வாழும் மக்களைக் குறிக்கின்றது. ஊரில் இருக்கும் மக்களின் மகிழ்வைத்தான் ஊரின் மகிழ்வாகக் கூறுகின்றோம். ஊர் என்பது ஊர் மக்களாகக் காட்சியளிக்கின்றது. அதுபோலவே இறைவன் என்பவன் தனியாக காட்சியளிப்பவன் அல்லன். அது அறிவுக்கும் பொருத்தமற்றது. இறையே அருவாகவும்– உருவாகவும் காட்சியளிக்கின்றது.

வஹ்தத்துல் வுஜூத் என்னும் இவ்வுயிர் நாடி போன்ற உயர்கலை உடலுக்குத் தந்தையாய் விளங்கிய ஆதம் (அலை) அவர்கள் காலத்திலேயே இத்தாபிக்கப்பட்டு ஏனைய நபிமார்களாலும் நிலை நிறுத்தப்பட்டு வந்தது. இந்த உண்மை நமது ஆருயிர் செய்கு நாயகம் அவர்களால் இக்காலத்தில் உயிர்ப்பிக்கப்பட்டு வருகின்றது. இதை உண்மைகொண்டவர்கள் ஜயமடைந்தனர். ஜயமடைகின்றனர். முரண்பட்டவர்கள் நட்டமடைந்தனர். நட்டமடைகின்றனர்.

**வாழிய வஹ்தத்துல் வுஜூத்!**

**வீழட்டும் அஞ்ஞானம்!!**

**பரவட்டும் மெய்ஞானம்!!!**

---

தாம் சம்பாதித்தது ஹலாலா? ஹராமா? என மக்கள் கவலைப்படாத ஒரு காலம் (இனி) வரும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி). நூல்: புகாரீ)

ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இஸ்லாமியப்பண்புகளில் சிறந்தது எது? என்று கேட்டார். நீர் பசித்தவர்க்கு உணவளிப்பதும், தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் ஸலாம் சொல்வதும் என்று ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அருளினார்கள்.

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி).

மனிதனுடைய ஒட்டு மொத்த சீதேவித்தனமும் அவன் தன் நஃப்ஸை அடக்குவதில்தான் இருக்கிறது.

ஒட்டு மொத்த மூதேவித்தனமும் நஃப்ஸுக்கு அவன் அடிமையாவதில்தான் இருக்கிறது. (இமாம் கஸ்ஸாலீ –ரஹ்–)

*வரலாற்றில் ஓர் ஏடு.*

# கருணைக்கடல்

ஸஃபானா, நஜ்த் தேசத்தின் பெரும் கொடையாளர் ஹாதிம் தாயி அவர்களின் மகளார். இப்போது நபிகளாரின் முன்னால் கைதியாக பிடிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தார்.

ஸஃபானாவோடு, அவர்களின் கோத்திரத்தார் சிலரும் கைதிகளாக பிடிக்கப்பட்டு இருந்தனர். ஸஃபானாவின் சகோதரர் அதீ இப்னு ஹாதிம் முஸ்லிம்களின் படை தமது தேசத்திற்குள் நுழைவதை அறிந்ததும், ஸஃபானாவையும், தமது குடும்பத்தாரையும் விட்டு விட்டு ஓடிவிட்டார்.

அண்ணலார்,மஸ்ஜிதுன் நபவீயில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு குடிலைத் தாண்டி தமது இல்லத்திலிருந்து மஸ்ஜிதை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, "அல்லாஹ்வின் தூதரே!" எனும் ஒரு குரல் அழைத்ததைக் கேட்கிறார்கள். குரல் வந்த திசை நோக்கிப் பார்க்கின்றார்கள். அங்கே ஸஃபானா நின்று கொண்டிருந்தார்கள்.

தொடர்ந்தார் ஸஃபானா தமது பேச்சை, "அல்லாஹ்வின் தூதரே! என் தந்தை இறந்து விட்டார், எங்களின் தலைவரோ எங்களை விட்டு ஓடிவிட்டார். தாங்கள் தான் என்மீது கருணை காட்ட வேண்டும்!" என்று கூறி முடித்தார்.

நபிகளார் மௌனமாகச் சென்று விடுகின்றார்கள். மறு நாளும் அது போன்றே நடக்கிறது. மூன்றாம் நாளும் ஸஃபானா அழைக்க, அருகே வந்த அண்ணலார் ஆதரவாய்ப் பார்க்கின்றார்கள்.

ஸஃபானா, "அல்லாஹ்வின் தூதரே! இல்லாதோருக்கு உதவிகள் புரிந்தும், கஷ்டத்தில் சிக்கியவர்களை அதிலிருந்து காப்பாற்றியும், பலகீனமானவர்களைத் தூக்கிப் பிடித்தும், குடும்ப உறவுளை பலப்படுத்தியும், பிரயாணிகளுக்கு உணவளித்தும், ஏழைப் பெண்களுக்கு திருமணம் செய்து கொடுத்தும் வந்த ஒருவரான ஹாத்திம் தாயின் மகள் தான் நான். நீங்கள் எனக்குக் கருணை காட்ட வேண்டும்" என்று வேண்டி நின்றார்கள்.

ஸஃபானாவின் பேச்சை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உண்மையில் நீ சொன்ன அனைத்து நற்காரியங்களும், இஸ்லாம் உயர்த்திக் கூறுகின்ற நற்காரியங்களே!

*(மீதி 44 ஆம் பக்கத்தில்....)*

# தப்லீக் ஜமாஅத்தின் வஹ்ஹாபியக் கொள்கைகள்!

*( சமீபத்தில் சவூதி அரேபிய அரசு தப்லீக் இயக்கத்தை தடைசெய்து, அது வழிகெடுக்கும் தீவிரவாதக் கும்பல் என அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதைத்தான் ஸுன்னத் வல் ஜமாஅத் அறிஞர்கள் காலம் காலமாய் எச்சரித்து வந்தார்கள். இப்போதாவது முஸ்லிம் உலகம் விழித்துக் கொண்டு அவர்கள் பள்ளிக்குள் வராமல் தடைசெய்வார்களா எனப் பார்ப்போம்!)*

1. அல்லாஹுதஆலா பொய் சொல்லுவது சாத்தியம்.

(ஃபதாவா ரஷீதியா, வால்யூம் 1, பக்கம் 19)

2. அல்லாஹுதஆலா தனது படைப்புகள் செய்யும் செயலை முன்னரே அறிந்திருக்க மாட்டான். படைப்புகள் ஒரு செயலை செய்த பின்னரே அல்லாஹ் அதை அறிகின்றான். (தஃப்சீர் புல்காதுல் ஹைறரான், பக்கம் 157, 158)

3. ஷைத்தானும், மலக்குல் மவ்த்தும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட நிறைய அறிந்துள்ளார்கள்.

(பராஹீனே காதியா, பக்கம் 51, 52)

4. நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தனது இறுதி முடிவு என்னவென்று தெரியாது, மேலும் அவர்களுக்கு சுவருக்கு பின்னால் இருப்பது கூட தெரியாது. (பராஹீனே காதியா, பக்கம் 51)

5. அல்லாஹுதஆலாவால் அண்ணலெம் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவும், மறைவான ஞானமும் விலங்குகளுக்கும், மதலைகளுக்கும், பைத்தியக்காரர் களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (ஹிஃப்ஸுல் ஈமான், பக்கம் 7)

6. தொழுகையில் அண்ணலம் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிந்தனை வருவது எருமை அல்லது கழுதையின் சிந்தனையில் மூழ்குவதை விட மோசமானது. (ஸிராத்தே முஸ்தகீம், பக்கம் 86)

7. ரஹ்மத்துல் ஆலமீன் என்பது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட தனித்துவமான பண்பு அல்ல, பிற நல்லடியார்களையும் ரஹ்மத்துல் ஆலமீன் என்று அழைக்கலாம்.

(ஃபதாவா ரஷீதியா, வால்யூம் 2, பக்கம் 12)

8. மார்க்கம் அறியாத பாமர மக்களுக்கு காத்தமுன் நபிய்யீன் என்பது இறுதி நபி என்று அர்த்தம் கொள்வர். எனினும் விஷயம் அறிந்தவர்களுக்கு இது சரியான விளக்கமன்று. அண்ணலெம் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பின்னர் ஒரு நபி பிறந்தாலும் அது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் இறுதியானவர்கள் என்பதில் எந்த விளைவையும் உண்டாக்காது. (துஹ்தீருன் நாஸ், பக்கம் 3, 25)

9. அண்ணலம் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உர்து மொழியை தாருல் உலூம் தேவ்பந்தின் உலமாக்களிடம் இருந்து கற்றார்கள். (பராஹீனே காதிஆ, பக்கம் 26)

10. நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஒரு மூத்த சகோதரரைப் போன்று தான் கண்ணியமளிக்கப்பட வேண்டும்.
(துக்வியத்துல் ஈமான், பக்கம் 58)

11. அல்லாஹ் நாடினால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் போன்று கோடானு கோடி பேர்களை உருவாக்குவான்.
(துக்வியத்துல் ஈமான், பக்கம் 16)

12. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மறைந்த பிறகு மண்ணோடு மண்ணாகிவிட்டார்கள். (துக்வியத்துல் ஈமான், பக்கம் 59)

13. அனைத்து அன்பியாக்களும், இறைத்தூதர்களும் பயனற்றவர்கள்.
(துக்வியத்துல் ஈமான், பக்கம் 29)

14. இறைத்தூதர்கள் பொய்யை விட்டு தூய்மையானவர்களாக இருக்க வேண்டிய தேவை இல்லை. (துஸ் பியதுல் அகாயித், பக்கம் 25)

15. ஒரு நபியை ஒரு மனிதனைப் போல மட்டும் தான் புகழ வேண்டும். இன்னும் அதற்குக் குறைவாகவேவ புகழவேண்டும்.
(துக்வியத்துல் ஈமான், பக்கம் 35)

16. படைப்புகளில் மேலானவர்களான நபிமார்களும், கீழான பிற படைப்புகளும், எல்லாரும் இல்ம் என்னும் அறிவற்றவர்களாகவும் அறியாமையிலும் இருக்கிறார்கள். (துக்வியத்துல் ஈமான், பக்கம் 3)

17. படைப்புகளில் மேலானவர்களான நபிமார்களும், கீழான பிற படைப்புகளும், அல்லாஹ்வின் திருமுன் ஒரு செருப்பு தைக்கும் செம்மானை விடகீழாகவே உள்ளனர். (துக்வியத்துல் ஈமான், பக்கம் 14)

18. ஒரு நபிக்கு தனது உம்மத்திடம் உள்ள அந்தஸ்து ஒரு கிராம தலைவரைப் போன்று அல்லது நிலக்கிழார் போன்றது. (துக்வியத்துல் ஈமான், பக்கம் 61)

19. யாருடைய பெயர் முஹம்மது, அலி என்று உள்ளதோ அவர்களுக்கு எதன் மீதும் அதிகாரம் இல்லை, ஒரு நபியோ அல்லது வலியோ அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. (துக்வியத்துல் ஈமான், பக்கம் 41)

20. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தமது நுண்ணறிவை இழந்து விட்டார்கள். (துக்வியத்துல் ஈமான், பக்கம் 55)

21. உம்மத்துகள் தங்களது நபியை அமல்களில் முந்திவிடுவர்.

(துஹ்தீருன்னாஸ், பக்கம் 5)

22. நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் இருந்து கீழே விழாமல் ஒரு தேவ்பந்த் உலமா காப்பாற்றினார். (புல்காதுள் ஹைறரான், பக்கம் 8)

23. லா இலாஹ இல்லல்லாஹு அஷ்ரப் அலி ரசூலுல்லாஹ், அல்லாஹும்ம ஸல்லிஅலா செய்யதினா நபியினா அஷ்ரப் அலி என்று கூறுவது, ஆகுமானதே, அவ்வாறு கூறுவதால் எந்த கேடும் இல்லை.

(ரிஸாலா அல் இம்தாத், பக்கம் 35 சபர் மாதம் 1336 ஹிஜ்ரி)

24. மீலாதுந்நபி கொண்டாடுவது இந்துக்கள் கிருஷ்ண ஜெயந்தியை கொண்டாடுவது போன்றது.

(பதாவா மீலாத் ஷரீப், பக்கம் 8 / பராஹீனே காதியா, பக்கம் 148)

25. நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரும்பும் எதுவும் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

(ஆபே ஹயாத், பக்கம் 69)

26. அல்லாஹ்வின் திருமுன், நபிமார்களும் வலிமார்களும் தூசுக்கு சமம்.

(துக்வீயதுல் ஈமான், பக்கம் 54)

27. நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒரு சகோதரர் என்று அழைப்பது சரியானதே.

(பராஹீனே காதிஆ, பக்கம் 3)

28. எந்த முஸ்லிமும் நபிமார்களையும், வலிமார்களையும் அல்லாஹ்வின் படைப்புகளாகவும், அடியாராகவும் ஏற்று பின்னர் அவர்களை வசீலாவாக்கி

(இடைப்பொருள்) உதவி கோரி, நேர்ச்சை, காணிக்கை, செலுத்தினால் குப்ரில் அபுஜஹலுக்கு ஒப்பாவார். (துக்வீயதுல் ஈமான், பக்கம் 7 மற்றும் 27)

29. தரூத் தாஜ் விரும்பத்தக்கதல்ல, இன்னும் அதை ஓதுவதும் கூடாது. (புழாயிலே தரூத் ஷரீப், பக்கம் 73 மற்றும் தஸ்கிரதுர் ரஷீத் பாகம் 2, பக்கம் 117)

30. மீலாது ஷரீப், மிஃறாஜ் ஷரீப், கியார்வீன் ஷரீப், உர்ஸ் ஷரீப், சைலும், பாதிஹா, ஈசாலே சவாப் இவை ஷரியத்திற்கு மாற்றமாகவும், கெட்ட பித்அத்களாகும், மேலும் இவை ஹிந்துக்களின் நடைமுறையாகும்.

(புதாவா அஷ்ராபியா, பாகம் 2, பக்கம் 58, புதாவா ரஷீதியா பாகம் 2 பக்கம் 144 மற்றும் 150, பாகம் 3 பக்கம் 93, 914)

31. வலிமார்களை அல்லாஹ்வின் படைப்புகள் என்று நன்கு உணர்ந்த நிலையிலும் விளிப்பது விலக்கப்பட்டுள்ளது. (துக்வீயதுல் ஈமான், பக்கம் 7)36.

32. ஜனாஸா தொழுகைக்குப்பின் துஆ ஓதுவது கூடாது.

(பத்வா ஜமீல் அஹ்மத் தான்வி, ஜாமிஆ அஷ்ரபியா, லாகூர்)

33. ஹிந்துக்களின் தீபாவளி, ஹோலி பண்டிகைகளின் போது வழங்கப்படும் பரிசுகளையும் உணவையும் முஸ்லிம்கள் வாங்குவது கூடும்.

(புதாவா ரஷீதியா, பாகம் 2, பக்கம் 130)

34. காபிர்கள் வட்டி பணம் மூலம் வைத்திருக்கும் குடிநீர் பந்தல்களில் முஸ்லிம்கள் தண்ணீர் குடிப்பது கூடும். (புதாவா ரஷீதியா, பாகம் 3, பக்கம் 113, 114)

அஸ்தஹ்பிருல்லாஹ்!!! லா ஹவ்ல வலா ஹுவத்த இல்லா பில்லாஹ்!!!

யா அல்லாஹ் உன் ஹபீபாகிய எம் உயிரினும் மேலான கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பொருட்டால் இந்த தப்லீக் தேவ்பந்திய வஹாபிய கொள்கைகளை விட்டும் காப்பாயாக!!! ஆமீன் !!

(தகவல்: இப்னு மீரான் – திருச்சி)

---

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அருளினார்கள்:

எவன் மக்களின் பணத்தைத் திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன் வாங்குகின்றானோ அவன் சார்பாக அல்லாஹ்வே அதனைத் திருப்பிச் செலுத்துவான். எவன் திருப்பிச் செலுத்தும் எண்ணமின்றி ஏமாற்றி அழித்துவிடும் எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அல்லாஹ்வும் அவனை அழித்துவிடுவான்.

புகாரீ – 2387. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி)

# வஸீலா

*மௌலவி, அல்ஹாஜ், B.M. ஜியாவுத்தீன் பாகவி ஹள்ரத் அவர்கள்.*
*முதல்வர், மதரஸா சுபுலுஸ்ஸலாம். அய்யம்பேட்டை.*

அப்துல் கைஸ் கூட்டத்தைச் சேர்ந்த ஸாரிஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்:

நாங்கள் பிரயாணம் முடிந்து மதீனாவை நோக்கித்திரும்பும்போது (பெருமானாரைச் சந்திக்கும் ஆவலில்) எங்கள் வாகனங்களை வேகவேகமாகச் செலுத்தி (விரைந்து வந்து) ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்கரத்தையும் கால்களையும் முத்தமிடுவோம். (அபூதாவூத் -5225)

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கைகள், கால்களைத் தொட்டு முத்தமிடுகிற வழக்கம் இதன் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.*

அபூஸயீதுல் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்:

ஒரு காலம் வரும்; அக்காலத்தில் ஒரு கூட்டம் போரிட்டுக் கொண்டிருக்கும். அப்போது அவர்களிடம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தோழமை கொண்டவர்கள் உள்ளார்களா என்று கேட்கப்படும். ஆம் என்றவுடன் அவர்களுக்கு அப்போரில் வெற்றி அருளப்படும். மீண்டும் ஒரு காலம் வரும்; அப்போது ஒரு கூட்டம் போரிடும். அப்போது அவர்களிடம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தோழமை கொண்டவர்களுடன் தோழமை கொண்டவர்கள் உள்ளார்களா என்று கேட்கப்படும். ஆம் என்றவுடன் அவர்களுக்கு அப்போரில் வெற்றி அருளப்படும். மீண்டும் ஒரு காலம் வரும்; அப்போது ஒரு கூட்டம் போரிடும். அப்போது அவர்களிடம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தோழமை கொண்டவர்களுடன் தோழமை கொண்டவர்களுடன் தோழமை கொண்டவர்கள் உள்ளனரா என்று கேட்கப்படும். ஆம் என்றவுடன் அவர்களுக்கு அப்போரில் வெற்றியருளப்படும். (புகாரீ ஷரீப் 1555)

*இதுவும் வஸீலாவின் ஒரு வகையாகும். நல்ஜலார், பெரியோர், அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்களின் பொருட்டால் நமது தேவைகள் நிறைவேறுமெனப் புரிந்து கொள்ள முடிகிறது.*

அனஸ் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்:

மதீனாவில் பஞ்சம் பீடித்துவிட்டால் உமர் (ரலி) அவர்கள் நபி ஸல்லல்லாஹு ரஸூல் அலைஹி வஸல்லம் அவர்களின் பாட்டனாரான அப்துல் முத்தலிபின் மகனார் அப்பாஸ் (ரலி) அவர்களை அழைத்து முன்னிறுத்தி, இறைவா! நாங்கள் எங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வஸீலாவாக வைத்து மழை வேண்டுவோம். உடனே மழையைப் பெற்றுக்கொண்டோம். இப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறிய தந்தையாரான அப்பாஸ் (ரலி) அவர்களை வஸீலாவாக வைத்து உன்னிடம் பிரார்த்திக்கிறோம். எங்களுக்கு மழை பொழிய வைப்பானாக! எனக் கேட்பார்கள். உடனே மழை பொழியப் பெறுவார்கள். (புகாரீ ஷரீஃப் -511)

*இதுவும் வஸீலா தேடுவதன் வழிமுறையெனப் புரிந்து கொள்ள முடிகிறது.*

அபுன்னுஃமான் அவர்கள் அறிவித்தார்கள்:

மதீனாவாசிகள் பெரும் பஞ்சத்திற்கு ஆளானபோது, அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் முறையிட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ருக்குச் சென்று அதனைப் பாருங்கள். மேலும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ருக்கு மேலே முகட்டில் வானம் தெரியுமளவு ஒரு இடைவெளியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்றார்கள். அவ்வாறே செய்தோம். புற்பூண்டுகள் முளைத்து (அவற்றை தாராளமாக உண்பதால்) ஒட்டகங்கள் கொழுத்துப் பெருக்கும் வண்ணம் மழை வரப்பெற்றோம். அந்த ஆண்டு ஆமுல் ஃபதக் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. (ஸுனனுத் தாரமீ)

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மண்ணறையை வஸீலாவாக வைத்து துஆ செய்வதில் ஸஹாபிகளுக்கு எவ்வளவு ஆழமான நம்பிக்கை! அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்திருக்கலாம். அல்லது மழைத் தொழுகை தொழுதிருக்கலாம். ஆனால் இதையெல்லாம் விடுத்து அவர்கள் சொன்ன ஆலோசனை மெய்சிலிர்க்கிறது.*

*பெருமானாரின் கப்ரை வானம் பார்க்கிற மாதிரி திறந்து வையுங்கள் என்றார்கள். வேலை அவ்வளவுதான்! அவ்வாறு செய்ததும் மழை கொட்டியது. இது வஸீலா தேடுவதில் உன்னத நிலையாகும்.*

***(வஸீலா வைப்போம்)***

# என் புனிதப் பிரயாணம்

*(அல்ஹாஃபிழ்,ஏ.கே.ஏ.ஷர்புத்தீன் ஃபைஜீ, கோவை)*

கொங்கு தமிழ் கொஞ்சிடும் கொங்கு மண்டலத்திலிருந்து நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சிடும் தஞ்சையை நோக்கிய ஓர் பிரயாணம், ஆம் சம்பைப் பட்டினம் மறவன் வயலில் மறையோனின் மஹான் மௌலானா அஸ்ஸெய்யிது முஹம்மது ஜமாலிய்யா அல் காதிரிய்யி அவர்களின் 73- வது புனித கந்தூரி விழாவில் பங்குபெற்று வந்த அற்புத ஜியாரத் பயணத்தின் அழகிய அனுபவ அலைகளில் உங்களையும் அழைத்துச் செல்லும் பயணம்தான் இந்த என் இனிய புனித பயணம். இதோ பயணம் தொடங்குகிறது.

கோவையிலிருந்து திருச்சியை நோக்கிப் பயணமாகிறேன். அது ஓர் அழகிய ரயில் பயணம்) வஹ்ததுல் வுஜுத் தொடர் பயணம் என்பதாலோ என்னவோ தொடர் வண்டிப் பயணம் துவக்கமாய் அமைந்தது. சரி... தொடர்கிறேன். (அன்று) டிசம்பர் 5- ஆம் நாள் தொடங்கி சரியாக 30 வது நிமிடத்தில் தொடர் வண்டி தனது பயணத்தை தொடங்கியது. இல்லை இல்லை என் பயணத்தை அது துவக்கியது. அது நடுநிசி இரவுப் பொழுது என்பதினால் அனைத்து கண்களும் நித்திரையில் மறைந்தன.

என் கண்களோ நித்திரையில்லாமல் விழித்தன. வேறு வழியில்லாமல் பேசவும் மொழியில்லாமல் தொடர் வண்டியோடு உரையாடத் தொடங்கினேன். உம்மிடம் அநேக பெட்டிகள் இருக்கிறதே என்றேன், ஆம் என்றது, நூற்றுக்கணக்கான சக்கரங்களும் உள்ளதே என்றேன். ஆம் என்றது, இத்தனை பெட்டிகளும் இத்தனை சக்கரங்களும் எப்படி ஒரே வழித்தடத்தில் பயணிக்கின்றன? என வியந்து கேட்டேன். அதற்கு அவை அனைத்தும் ஒன்றை நோக்கிச் சுழல்வதால் என்று கூறி தனது பயணத்தை தொடர்ந்தது, அந்த இரயில் வண்டி.

ஆம்... நாம் தொடக்கப் புள்ளிகள் அல்ல, தொடரும் சக்கரங்கள். சக்கரங்கள் சுழல்வதால் பயணமாகாது. சரியான ஒற்றை வழித்தடத்தில் சுழல்வதாலேயே பயணமாகும். மனிதனுள்ளும் சில சக்கரங்கள் உண்டு அவையும் சுழல்கின்றன. ஆனால் சரியான வழிதடத்தில் தொடராகச் சுழல்வதில்லை. அதனாலேயே இன்சானிய்யத்தை அவனால் கடக்க முடிவதில்லை. உலூஹிய்யதும், நுபுவத்தும், விலாயத்தும் ஓர் நேர்கோட்டில் சுழலும் சக்கரங்கள். இப்படியான எண்ண அலைகளில் அப்படியே சற்று கண்ணயர்ந்தேன்.

அதிகாலை 4.10 மணியளவில் திருச்சியை அடைந்தேன். "உன் பயணத்தை நீ தொடர்ந்து கொள்" என என்னை விட்டுச் சென்றது அந்த தொடர் வண்டி. மீண்டும் சந்திப்போம் என விடைபெற்று திருச்சி சந்திப்பின் முன் வாசல் வழியாய் வெளிவந்து சற்று காத்திருப்பிற்குப் பின் ஓர் அலை பேசியின் அழைப்பு. அதைத் தொடர்ந்து ஓர் அழகிய சந்திப்பும் நிகழ்ந்தது. ஆம். அதுநாள் வரையிலும் தொலைத் தொடர்புகளின் வழியாக மட்டுமே நட்புறவைப் பகிர்ந்து கொண்டிருந்த நாங்கள் அன்று தான் முதன் முதலாய் முகத்திற்கு முகமாய் முகம் மலர்ந்து அகம் மகிழ்ந்து கட்டியணைத்தும் அரவணைத்தும் கொண்டோம். அந்த அழகிய சந்திப்பு திருச்சி சந்திப்பில் (ஜங்ஷன்) நிகழ்ந்தது. அந்த நிதர்சனமான நட்புறவின் பெயர்?

(பிரயாணம் தொடரும்....)

---

*36 ஆம் பக்கத் தொடர்ச்சி.....*

உனக்கு எம் கருணையுண்டு! உன்னை நான் விடுதலை செய்கின்றேன்!" என்று கூறினார்கள். சிறிது நேரத்தில், ஸஃபானா அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டின் முன் நின்று அண்ணலாரை அழைக்கின்றார்கள்.

வெளியில் வந்த அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "குடிமக்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் என் தந்தை உறங்கவே மாட்டார். அப்படிப் பட்ட நல்ல மனிதர் ஒருவரின் மகளான எனக்கு என்னை மட்டும் நீங்கள் விடுவித்ததில் எப்படி மகிழ்ச்சியாய் இருக்கும்? என் நாட்டு மக்களையும் நீங்கள் விடுதலை செய்ய வேண்டும்" என்று ஸஃபானா கூறினார்.

இது கேட்ட அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிரித்தவாறே ஸஃபானாவின் கோத்திரத்தார் அனைவரையும் விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார்கள்.

மேலும், ஸஃபானாவிற்கு அணிய ஆடைகளையும், பயணிக்க வாகனமும், வழிச்செலவுக்கு பணமும் வழங்கி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்ணியப்படுத்தினார்கள்.

---

**மறைஞானப்பேழை சந்தாவைப்**

**புதுப்பித்து விட்டீர்களா?**

# எண்ணம் போல் வாழ்வு...!

ஒவ்வொரு கெட்ட குணமும் ஒவ்வொரு நோயை உண்டாக்கும்.

பெருமையும் கர்வமும் இதய நோய்களை உருவாக்கும்.

கவலையும் துயரமும் வயிற்று நோய்களை உருவாக்கும்.

பயமும் சந்தேகமும் சிறுநீரக நோய்களை உருவாக்கும்.

எரிச்சலும் கோபமும் கல்லீரல் நோய்களை உருவாக்கும்.

அமைதியை விரும்புவதே அனைத்தையும் குணமாக்கும்.

ஆரோக்கியமான உடலிலிருந்தே ஆரோக்கியமான சிந்தனைகள் பிறக்கும். எனவே, உடலின், மனதின் தேவைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். பசிக்கும் போதும் உணவருந்துங்கள். பசியை நீங்கள் புறக்கணித்தால், பசி உங்களைப் புறக்கணிக்கும். நல்ல சிந்தனையே நன்மையைத் தரும்.

ஆகவேதான், நமது கண்மணி வாப்பா நாயகமவர்கள் தினமும் காலையில் எழுந்ததும் நேர்மறையான வாக்கியங்களை ஆழ்மனதிலிருந்து நம்பிக்கையோடு கூறப் பணித்துள்ளார்கள்.

**தினமும் காலையில் எழுந்த உடன் ஓதுவதற்காக சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அற்புத மந்திர வாக்கியங்கள்!**

- நான் நல்ல சுகத்துடன் இருக்கிறேன். என்னுடைய உடலில் எந்த நோயும் இல்லை.
- நான் எப்போதும் சந்தோஷமாக இருக்கின்றேன். எனக்கு எந்தக் கவலையும் இல்லை.
- என் குடும்பத்தில் என் மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை, சகோதர – சகோதரிகள் அனைவரும் நல்வாழ்வு வாழ்கிறார்கள்.
- நான் நிறைந்த செல்வத்துடன் இருக்கின்றேன்.
- நான் எப்போதும் இறை பாதுகாப்புடன் உள்ளேன்.
- என்னைச் சூழ்ந்த பிரபஞ்சத்தின் சக்தி என்னை எப்போதும் பாதுகாத்து வருகிறது.

- என்னுடைய உடல் நன்றாக இருக்கிறது. நான் சுகமாய் இருக்கின்றேன்.
- என்னுடைய உடல்களில் நோய்களை எதிர்க்கும் சக்திகள் அதிகரித்துள்ளன.
- என்னுடைய இதயம் நன்கு பலமானது.
- என்னுடைய உடலில் எந்தக் கோளாறும் இல்லை.
- என்னுடைய இதயம் நல்ல முறையில் தொழிற்படுகிறது.
- என்னுடைய இதயத்திலிருந்து செல்லும் நாடிகளும் என்னுடைய இதயத்திற்கு வந்து சேரும் நாளங்களும் நல்லபடி இயங்குகின்றன.
- எனக்கு கொலஸ்ட்ரால் முதலிய எந்தத் தொந்தரவுகளும் இல்லை.
- என்னுடைய நுரையீரல்களும் என்னுடைய கிட்னிகளும் அதனுடன் சேர்ந்த எல்லா உறுப்புகளும் திருப்திகரமாக வேலை செய்கின்றன.
- நான் நல்ல சுகத்துடன் இருக்கின்றேன்.
- என்னுடைய வாழ்க்கை சிறப்படைந்து வருகின்றது.
- என்னுடைய பொருளாதாரம் மேன்மைப்படுகின்றது.
- என் வாழ்வு சந்தோஷமாயுள்ளது.
- எனது மனைவி, மக்களும் நானும் நீடூழி வாழ்வோம்! (ஆமீன்)

**குறிப்பு :**

மேற்கண்ட அற்புத மந்திர வாக்கியங்களில் 3–ஆவது வாக்கியத்தில், இதற்கு முன் வந்த பிரசுரங்களிலெல்லாம் மனைவி, பிள்ளைகள், தாய் சகோதரிகள் என்பதாக மட்டுமே இடம்பெற்றிருக்கும். அதாவது, நமது கண்மணி வாப்பா நாயகமவர்கள், தந்தையை இழந்த முரீதுப் பிள்ளை ஒருவருக்கு எழுதிக் கொடுத்த அற்புத மந்திர வாக்கியங்கள் தாம் இவை. இதையே நாம் அனைவரும் ஓதுமாறு பணிக்கப்பட்டோம். எனவே, 3–ஆம் வாக்கியத்தில் தாயோடு தந்தை என்றும் சகோதரியோடு – சகோதரர் என்றும் இணைத்து வாசித்துக் கொள்வது ஏற்றமாகும். இந்தத் தகவலை நமது வாட்ஸ்அப் குரூப் ஒன்றின் மூலம் நினைவுபடுத்திய துபை ஆத்தும சகோதரர் ஜனாப். முஹிய்யுத்தீன் சிராஜ் அண்ணன் அவர்களுக்கு நன்றி. அற்புத மந்திர வாக்கியங்களை தினந்தோறும் வாசித்து, ஆரோக்கியத்தோடு வாழ்வோம்!

*(தகவல் : அ.நை.மு. அன்சாரி, திருச்சி.)*

# உம்மு ஸல்மா (ரலி)

**பி**ரபல குரைஷித் தலைவரான அபூ உமையாவின் புத்திரிதான் உம்மு ஸல்மா. இளமையிலேயே, அழகிலும், குணத்திலும் சிறந்திருந்த இவர்களை இவர்களுடைய சிறிய தகப்பனார் மகன் அப்துல்லாஹ் மணமுடித்திருந்தார். இவர்களுக்கு ஸல்மா என்ற ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதனால் ஹிந்து என்ற அசல் பெயருடைய அவர்கள் உம்மு ஸல்மா (ஸல்மாவின் தாய்) என்றும், இவர்கள் கணவர் அபூஸல்மா (ஸல்மாவின் தந்தை) என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் ஆரம்பகால முஸ்லிம்களில் சேர்ந்தவர்களாவர். அபூ ஸல்மா இஸ்லாத்தைத் தழுவிய பத்தாவது நபராவார். எனவே, மக்காவில் குரைஷிக் காபிர்களின் கொடுமைகளுக்கு இவர்களும் ஆளாக நேர்ந்தது. பின்னர் இவர்கள் இருவரும் அபிஸீனியா சென்று குடியேறினர். மக்காவில் குரைஷிகளுக்கும் நபிபெருமானாருக்கும் சமாதான முண்டாகிவிட்டது என்று ஒரு பொய் வதந்தியைக் கேள்வியுற்ற இவர்கள் மீண்டும் மக்கா திரும்பினார்கள். இதற்குச் சில வருடங்களுக்குப் பின்னர் நபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை விட்டு நீங்கி மதீனா சென்றடையவே. இவர்களும் மதீனா புறப்பட்டார்கள். ஆனால், உம்மு ஸல்மாவின் உறவினர்கள் அவர்களைப் போக வொட்டாது தடுத்து விட்டனர். இதனால், அபூ ஸல்மா மட்டுமே மதீனா சென்றார். இதன்பின் உம்மு ஸல்மா பல கஷ்டங்களை அனுபவித்து விட்டு மதீனா நகர் சென்றடைந்தார்கள். அங்கும் அவர்கள் கடினமான வேலைகள் செய்ய நேர்ந்தது. அச்சமயம் உஹது யுத்தத்தில் பெருங்காயமடைந்த அபூ ஸல்மா அதனாலேயே பின்னர் இறந்து போனார். அவர் இறக்கும்போது உம்மு ஸல்மா பூரணக் கர்ப்பிணியாய் இருந்தார். இந்த நிலையில் அவர்கள் மக்காவிலிருந்த தம் பெற்றோர்களிடமும் திரும்பமுடியவில்லை. எனவே, நபிபெருமானார் அவர்களுடைய பராமரிப்புக்குத் தேவையானவைகளைக் கொடுத்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள. அவர்களுக்குக் குழந்தை பிறந்து, அர்களுடைய இத்தா என்ற காத்திருக்க வேண்டிய காலம் முடிவடைந்ததும் நபிபெருமானாரே அவர்களை (ஹிஜ்ரி 4, ஷவ்வால் கடைசிப் பிறையன்று) மணந்து கொண்டார்கள். அவர்களை அச்சமயம் காலமாகிவிட்ட உம்முல் மஸாக்கீன் ஜைனப் இருந்து வந்த குடிசையில்

குடிபுகுத்தினார்கள். அங்கே கொஞ்சம் கோதுமையும் திரிகையும் இருந்தன. உம்மு ஸல்மா அந்தக் கோதுமையில் சிறிது எடுத்துத் திரித்து மாவாக்கி அதில் நெய்சேர்த்துப் பிசைந்து, திருமணமான தினத்தன்று நபிபெருமானாருக்கு அளித்தார்கள். அச்சமயம் அவர்களுக்கு வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். அவர்கள் அபூ ஸல்மாவை இழந்த சமயம், “இறைவா, இந்த நஷ்டத்தால் எனக்கு நன்மையை அருளுவாயாக! இதைவிடச் சிறந்த ஒன்றை இதற்குப் பகரமாக எனக்குத் தந்தருள்வாயாக!” என்று பிரார்த்திக்குமாறு நபிபெருமானார் அவர்களுக்கு உபதேசமருளினார்கள். அவர்கள் இதை ஓதிவந்தாலும், தமக்கு எது கிடைத்துவிடப்போகிறது என்று எண்ணிக் கொள்வதுண்டு கடைசியில் அல்லா(ஹ்)வே அவர்களுடைய பிரார்த்தனையை ஏற்று அவர்களை நபிபெருமானாரின் மனைவியாக ஆக்கினான். அன்னை உம்மு ஸல்மா தொழுகையிலும், நோன்பிலும் மிகவும் கண்டிப்பானவர்களாக இருந்தார்கள். வாரத்தில் மூன்று நாட்கள் தவறாது நோன்பு நோற்றார்கள். ‘தஹஜ்ஜுத்’ என்ற நள்ளிரவுத் தொழுகையை ஒழுங்காகத் தொழுதார்கள். தம்மிடம் உதவி கேட்டு வந்த யாருக்கும் தம்மாலான சகல உதவிகளையும் செய்தார்கள்.

இவர்கள் சிறந்த கல்விமானாய் இருந்ததுடன், நபிபெருமானாரிடமிருந்து நேரடியாகப் பல ஹதீஸ்களைக் கேட்டவர்களுமாவார்கள். நபிபெருமானாரின் உபதேசங்களை இவர்கள் மிகவும் கவனமாகக் கேட்பார்கள். இவர்களும் பெண்களுக்கு உபந்நியாசமருளுவார்கள். இவர்கள் திருகுர்ஆனை இனிமையுடன் ஓதுவார்கள். நபிபெருமானார் அவர்களை ஓதச்சொல்லிக் கேட்டுக் கொண்டிருப்பதுண்டு. இவர்கள் தம் திறமையால் வெகு சாதுர்யமாகப் பதிலளிப்பதுண்டு. ஒரு சமயம் நபிபெருமானாரின் மற்றப் பிராட்டியர்கள் யாவரும் சேர்ந்து இவர்களுடைய திறமையைச் சோதிப்பதற்காக இவர்களிடம் ஒரு கேள்வியை அனுப்பி விடை கேட்டனர். இவர்கள் அதற்குக் கொடுத்த பதில் யாவரையும் திருப்தி செய்ததோடு, அவர்களின் நன் மதிப்பையும் பெற்றளித்தது.

ஒரு சமயம் ஸிரியாவிலுள்ள கும்ஸ் என்ற பிரபலமான குளிக்குமிடத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர் இவர்களிடம் வந்து அங்கே திறந்த வெளியில் குளிப்பதில் தாங்கள் அனுபவித்த சுகத்தை விவரித்துக் கொண்டிருந்தனர். இது கேட்ட உம்மு ஸல்மாவுக்குக் கோபம் அதிகமாகி விட்டது. இவ்விதம் பகிரங்கமான இடத்தில் பெண்கள் வெட்கங்கெட்டவர்களாகக் குளிப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது என்று கூறித் தன் வீட்டையன்றி வேறு இடத்தில் தன் உடைகளை அகற்றும் பெண் இறைவனின் அருளை இழந்தவளாவாள் என்று பெருமானார் கூறியதை இவர்கள் விவரித்ததும் அந்தப் பெண்கள் பாவத்தை எண்ணிப் பச்சாதாபப்பட்டு அழலாயினர்.

உம்மு ஸல்மா குடியிருந்த குடிசை மற்றப் பிராட்டியார்களுடையவைபோல் மண்ணைக் குழைத்து வைத்துக் கட்டியதாகும். ஒரு சமயம் நபிபெருமானார் யுத்தத்துக்குப் போயிருந்தபோது இந்தச் சுவர்களுள் ஒன்று விழுந்து விட்டது. இதை உம்மு ஸல்மா நாயகி, சுடாத செங்கல்களை வைத்துக் கட்டச் செய்தார்கள். நபிபெருமானார் திருப்பி வந்ததும் அந்தப் பச்சைச் செங்கல் சுவரை கண்டு, “உம்மு ஸல்மா ஒரு சமயவிஸ்வாசி தன் செல்வத்தை மிக மிக நஷ்டகரமான வழியில் செலவிட முடியுமாயின் அது கட்டிடங் கட்டுவதன் மூலந்தான்” என்று மொழிந்தார்கள்.

ஹுதைபியா உடன்படிக்கை முடிவடைந்ததும், நபிபெருமானார் அல்லா(ஹ்)வுக்குக் ‘குர்பானி’ ஏதும் கொடுக்கலாம் என்று யோசனை கூறியவர்கள் உம்மு ஸல்மாவேயாவார்கள். கைபர் போரில் இவர்கள் நபி பெருமானாரோடு அக்களம் செனறிருந்தார்கள். இவர்கள் நபிபெருமானாரிடம் கொண்டிருந்த அன்பு அளப்பரியதாகும். நபிபெருமானாரின் இறுதிக் காலத்தில் இவர்கள் ஆயிஷா நாயகியின் குடிசைக்குச் சென்று, கடைசிவரை அங்கேயே தங்கியிருந்தார்கள். ஒரு நாள் இவர்கள் நபிபெருமானாரைப் பார்த்து அழுதவாறு, “பெருமானே, நானும் என் குடும்பம் முழுமையும் இறக்கிறோம் நீங்கள் ஜீவித்திருந்தால் போதும்” என்று கூறினார்கள். அந்த வார்த்தையைக் கூற வேண்டாமென்றும், கூச்சலிட்டு அழவேண்டாமென்றும் பெருமானார் பதிலளித்தார்கள். நபிபெருமானின் காலமாகிப் பல நாட்கள் வரை இவர்கள் வாய் பேசாதிருந்ததாகவும், நோன்பு பிடித்ததாகவும் சொல்லப்படுகிறது.

பெருமானாரின் பிராட்டியார்களுள் கடைசியில் காலமானவர்கள் உம்மு ஸல்மாதாம். முஸ்லிம்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளும் கொடுமையைக் காண நேர்ந்தவர்களும் இவர்களே. இமாம் ஹுஸைன் (ரலி) வீர மரணமடைந்த துயரச் செய்தியையும் இவர்கள் கேட்டார்கள். ஒருநாள் இவர்கள் நபிபெருமானாரைக் கனவில் கண்டார்கள். “எங்கிருந்து வருகிறீர்கள்?” என அவர்களிடம் கேட்டார்கள் அவர்கள், “நான் ஹுஸைனை நல்லடக்கஞ் செய்துவிட்டுத் திரும்புகிறேன்” என்று பதிலளித்தார்கள். இவ்விதம் இவர்கள் கனவு கண்டதன்பின் அந்த வீரமரணம் பற்றிய செய்தியும் இவர்களை எட்டிற்று.

ஹிஜ்ரி 61- ல், தமது எண்பத்து நான்காம் வயதில் உம்முஸல்மா காலமானார்கள். நபிபெருமானாரின் கடைசிப் பிராட்டியாரான இவர்களை ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கஞ் செய்ய லக்ஷக்கணக்கான ஜனங்கள் திரண்டு வந்தனர்.

*(அன்னையரின் அறிமுகம் தொடரும்)*

# இனிக்கும் இறைமொழி

இறையருட் கவிமணி கா. அப்துல் கஃபூர் எம்.ஏ.

## *இறையருட்கொடைக்கு இறுதிக் கேள்வி*

*"பின்னர், உறுதியாக அந்நாளில் (இறைவன் உங்களுக்கு அருளிய) அருட்கொடைகளைப் பற்றி விசாரிக்கப் படுவீர்கள்..." (102 : 8)*

நன்றி நவிலல் இன்றைய உலகில் ஒரு நாகரிகச் சின்னம். கூட்டங்களின் இறுதியிலும், ஆட்டங்களின் நடுவிலும், பங்கு பற்றுவோருக்கு நன்றி பகர்தல் ஒரு மரபாகக் கருதப்படுகிறது.

கடைகளில் வரும் வாடிக்கைக்காரர்களுக்குப் பொருளை வளமான விலைக்கு விற்பனை செய்வோரும் பணம் பெறும்போது நன்றி கூறத் தவறுவதில்லை. இழந்தப் பொருளைத் திருப்பித் தருவோரும் விழுந்த பொருளை எடுத்துத் தருவோரும் நன்றியைப் பரிசாகப் பெறுகின்றனர். செய்யாமற் செய்த உதவி, காலத்தினாற் செய்த நன்றி, பயன் கருதாமற் செய்த உதவி என நன்றியினை வகைப்படுத்திக் காட்டுவார் வள்ளுவனார்.

உலகத்தார் நமக்குச் செய்கின்ற உதவிகளையும், உலகெலாம் படைத்து உயர்வுறக் காக்கும் காவல் முதல்வன் நமக்கு அளித்துள்ள அருட் கொடைகளையும் ஒப்பிட்டு நோக்குவோர், இறையுதவியின் இணையற்ற தன்மையை எளிதில் உணரலாம்.

"அல்லாஹ்வின் அருட்கொடைகளை (நிஃமத்துகளை) எண்ணிப் பார்ப்பீர்களாயின் அவற்றை உங்களால் கணித்திட இயலாது" என்னும் மறையுரையின் மாண்பினை உணரலாம்.

*மாநிலப் பொருட்கள் அனைத்தையும் மனிதர்களுக்காகவே இறைவன் படைத்துள்ளான் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை. வானங்களைத் தூண்களின்றிப் படைத்து, நிலமானது நம்மைக் கவிழ்த்து விடாதிருக்கும் பொருட்டு மலைகளை நாட்டி வைத்து, வித விதமான உயிரினங்களை அதில் பரப்பியுள்ளான், இறைவன் (31 : 10).*

*மேகத்திலிருந்து மழையை அளவோடு இறக்கி வைத்துப் பின்னர் அதைக் கொண்டு இறந்து போன நிலத்தை உயிர்ப்பிக்கின்றான் (43 : 11).*

*மனிதர்கள் ஒன்றையும் அறியாதிருந்த நிலையில், அன்னையர் வயிற்றிலிருந்து அவர்களை வெளிப்படுத்தி அவர்களுக்குச் செவிகளையும் கண்களையும் இதயத்தையும் ஈந்துள்ளான் (16 : 78).*

*மனிதர்கள் மன அமைதி பெறுவதற்காக மனைவியரை படைத்துக் கணவன் மனைவியரிடையே அன்பையும் நேசத்தையும் அமைத்துள்ளான் (30 : 21)*

*படர்ந்த கொடிகளும் படராத கொடிகளும் உள்ள சோலைகளையும் பேரீத்த மரங்களையும், புசிக்கக் கூடிய விதவிதமான தானியங்களையும், பார்வைக்கு ஒன்று போலவும் சுவையில் வெவ்வேறாகவும் உள்ள ஒலிவம், மாதுளை, முதலியவற்றை ஆக்கியுள்ளான் (6 : 141)*

*ஆடு மாடு ஒட்டகம் முதலியவற்றின் மடியிலிருந்து சுரக்கும் பாலைப் புகட்டுகிறான் (23 : 21)*

*கப்பலை வசப்படுத்திக் கொடுத்துத் தன் கட்டளையின் படி கடலில் செல்ல வைக்கின்றான். ஆறுகளையும் விருப்பப்படி பாய வசதியளித்துள்ளான் (14 : 32)*

*கால் நடைகளையும் மனிதர்களுக்காக அவனே படைத்துள்ளான். அவற்றில் குளிரைத் தடுக்கும் பொருட்களும் பல பயன்களும் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் புசிக்கவும் செய்கிறோம் (16 :5)*

இத்தகைய மறைமொழிகளும், நாயக நன்மொழிகளும், அறிஞர் பொன் மொழிகளும், வல்லான் வழங்கியுள்ள அருட்கொடைகளின் நீண்ட பட்டியலை நமக்குத் தருகின்றன.

இத்தகைய அருட்கொடைகளின் அருமை பெருமைகளை உணர்வதற்கு நாம் ஆழ்ந்த சிந்தனை செய்ய வேண்டும். ‘நிழலின் அருமை வெயிலில் தெரியும்’ என்பது போல, வானம் வழங்குவதில் தாமத மேற்படுகின்ற போது தண்ணீரின் அருமையை அறிகின்றோம். கண் பார்வை குன்றுகின்றபோது விழியின் விழுப்பத்தை உணர்கின்றோம். முழு வளர்ச்சி பெற்ற மனித உடல், இறைவனின் இணையற்ற கருணைக்கு எடுத்துக்காட்டாகவும் அரிய அருட்கொடையாகவும் அமைந்துள்ளது. கண், காது, மூக்கு, நாக்கு, மூளை, இதயம் ஆகியவற்றை ஆய்ந்து நோக்கும் உடற்கூறு வல்லுநர்கள் மிகப்பெரும் வியப்படைகின்றார்கள்.

பேரறிஞர்கள், இறைவனின் அருட்கொடைகளை, இம்மைத் தொடர்புடையன, மறுமைத் தொடர்புடையன என ஆன்மீகத் தொடர்புடையன, சரீரத் தொடர்புடையன

எனப் பிரித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். ஆயுள், உடல்நலம், ஒருவரிடத்து ஒன்று சேர்ந்து அமைவது அரிதெனினும், அவற்றுள் ஒருசிலவேனும் எல்லோரிடத்திலும் இணைந்திருக்கக் காணலாம். மக்கள் நலனுக்கு மாறாக ஒருவன் அவற்றைப் பயன்படுத்துகின்றபோது உலகமே எரிநரகாக மாறிவிடுகின்றது.

வழங்கப்பட்டுள்ள அறிவாற்றல் முதலிய அருட்கொடைகளை பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டியது மனிதனின் நீங்காக்கடனாகும்; மனிதப் பண்புமாகும், இறைவன் மனிதனிடத்திலிருந்து எதிர்பார்ப்பதும் இந்நன்றியுணர்வேயாகும். அந்நன்றியின் வெளிப்பாடே வணக்கமெனப் பெயர் பெறுகின்றது. நன்றியுணர்வுத் தேர்விலே, மனிதனுக்கு ஏற்படுகின்ற சோதனைகள் பல. அச்சோதனையில் வெற்றி பெற்றோர் சுவன வாழ்வைப் பரிசாகப் பெறுகின்றனர்.

பிழைகளெல்லாம் பொறுக்கப்பட்ட பெருமானார் திரு நபியவர்கள் இரு கால்களும் வீங்கும் வரை இரவெல்லாம் கால்கடுக்க நின்று வணங்குகின்ற நிலையினையறிந்த ஒருவர், அதுபற்றி அவர்களைக் கேட்டபோது அண்ணலார் அளித்த மறுமொழி, நான் ஒரு நன்றியுள்ள அடிமையாக இருக்க வேண்டாமா? என்பது தான்.

நின்றாலும், இருந்தாலும், நடந்தாலும், துயின்றாலும், நாயனுக்கு நன்றி செலுத்துவதே நாயகப் பெருமானின் வாழ்வாக அமைந்தது. ஒருபோது, கொடிய வேனில் நண்பகலில் பசியால் வாடியவர்களாகப் பெருமானார் அவர்களும் அன்புத் தோழர் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரும், அபூஜயூப் அன்சாரி (ரலி) அவர்களின் இல்லத்திற்குச் செல்கின்றனர். அவர்களுக்குப் பேரீத்தங்குலை யொன்று கொடுக்கப்பட்டுப் பின்னர் உணவு சமைத்துப் பரிமாறப்படுகின்றது. பல நாட்களாகப் பட்டினிக்காளானஅருமைப் புதல்வி பாத்திமா (ரலி) அவர்களுக்கு அவ்வுணவில் ஒரு சிறு பகுதியை அனுப்பி வைத்து விட்டுத் தோழர்களுடன் உணவருந்திய அண்ணலார் அவர்கள், கண்கள் கசிய, "இந்த அருட்கொடை களைப் பற்றியெல்லாம் நியாயத் தீர்ப்பு நாளன்று நாம் விசாரிக்கப் படுவோம்" என மொழிந்தபோது தோழர்களின் நெஞ்சங்கள் நெகிழ்கின்றன. இக்கருத்தினையே தலைப்பிலே காணும் திருமறைத் தொடர் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

"அத்தகாதுர்" (பேராசை) என்னும் தலைப்பினைக் கொண்ட திருமறையின் 102- வது அத்தியாயத்தின் இறுதி வசனமாக இத்தொடர் அமைந்துள்ளது.

*“நீங்கள் மண்ணறையைச் சந்திக்கும் வரை, பொருளை அதிகப்படுத்திக் கொள்ளும் பேராசை (அல்லாஹ்வை விட்டும்) உங்களைப் பராக்காக்கி விட்டது (அது என்னவென்பதைப் பின்னர்) நீங்கள் நன்கறிந்து கொள்வீர்கள் (அதன் பயன் களையும்) பின்னர் நீங்கள் நன்கறிந்து கொள்வீர்கள். அறிந்து கொள்ளுங்கள் (அதன் பயனை) ஐயமற நீங்கள் அறிவீர்களாயின், உறுதியாக நரகத்தையே நீங்கள் (உங்கள் கண்முன்) காண்பீர்கள். அதனை நீங்கள் (உங்கள் கண்ணால்) கண்டு கொள்வது, உண்மை என்பது உறுதி, பின்னர் உறுதியாக அந்நாளில் (இறைவன் உங்களுக்கு அருளிய) அருட்கொடைகளைப்பற்றி விசாரிக்கப் படுவீர்கள்.”*

மண்ணறையை அடைவது வரையில் செல்வத்தை அடையும் பேராசை மனிதரை, உண்மையை விட்டும் பராக்காக்கி விட்டது என்பதும், தன் தீய வினையினை மனிதன் கண்கூடாகக் காண்பான் என்பதும், இறைவன் அருட்கொடைகள் எம்முறையில் பயன்படுத்தப் பட்டனவென்னும் விசாரணை உறுதி என்பதும் இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அத்தியாயம் மக்காவில் அருளப்பட்டதாகப் பெரும்பாலோர் கருதுவதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. பொருட்செல்வம், மக்கள் தொகை முதலியவற்றால் பெருமையடித்துக் கொண்டிருந்த மதீனா வாழ் யூதர்களின் நிலையைச் சுட்டிக்காட்டி முஸ்லிம்கள் இவ்வத்தியாயத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளார்களென கத்தாதா (ரலி) அவர்கள் கருதுவதால், மதீனாவில் இந்த அத்தியாயம் அருளப்பட்டிருக்கலாமோவெனச் சிலர் ஐயுறுகின்றனர்.

குறைஷிக் குலத்தின் இருபிரிவினர்களான, ‘அப்துல் முனாப்’ சந்ததியினருக் கும், ஸஹ்ம் சந்ததியினருக்கும் தலைமைப் பதவிக்காகப் போட்டிகள் நிகழ்ந்து வந்தன. ஒருபோது புதைகுழிப் பகுதிக்குச் சென்று இறந்தவர்களைக் கணக்கிட்டு, அதிகமாக இறந்தவர்களைக் கொண்ட கட்சியே வீரம் மிக்கதென்றும், ஆகவே அக்கட்சியிடமே தலைமைப் பதவியை ஒப்படைக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இத்தகைய பின்னணியிலேயே “நீங்கள் மண்ணறைகளைச் சிந்திக்கும் வரை பேராசையானது உங்களைப் பராக்காக்கி விட்ட”தெனத் தொடங்கும் இவ்வத்தியாயம் அருளப்பட்டதெனக் கூறுவர்.

மடிந்து மண்ணறைக்குச் செல்வது வரையில் ஓய்வின்றிப் பொருள் திரட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து வரும் இன்றைய உலக நிலை பற்றி எச்சரிக்கை விடுக்க இப்பகுதியின் தொடக்கம் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. அகிலமெல்லாம் கட்டி ஆளினும், ஆசைக்கோரளவில்லை என்னும் இலக்கியத் தொடர் இன்றைய உலகில் நூற்றுக்கு நூறு உண்மையாகி விட்டதோவென

நினைக்கத் தூண்டுகின்றது. "செல்வம்! செல்வம்! அதை விரைவில் அடைவதற்கு எதுவும் செய்வோம்!" என்னும் குறிக்கோள் அனைவர் உள்ளங்களையும் ஆட்டி வைக்கின்றது.

உலக வாழ்விற் பெறுகின்ற வாய்ப்புகளும் வசதிகளும், மாளிகையும் மாநிதியும் மரணமடைந்து மண்ணறைக்குச் செல்லும் தருணத்தில் எத்தகைய பயனையும் தாரா. "அறிந்து கொள்வீர்; உறுதியாக உலக வாழ்வென்பது, விளையாட்டும் வேடிக்கையும் அலங்காரமும், உங்களுக்கிடையே அபிமானம் காட்டுவதும், உடைமைகளைக் கொண்டும் மக்களைக் கொண்டும் பெருமை பாராட்டுவதுமாகும்" என்பது நாயக நன்மொழியாகும். மக்களும் செல்வமும் மானில வாழ்வை அணிபெறச் செய்வனவென்பது உண்மையே. ஆனால் அவற்றில் மட்டும் சிந்தனையைப் பதித்துவிட்டு, மறுமைக்குரிய செல்வத்தைத் திரட்ட மறந்து விடுவது மதியுடையோர் செயலன்று. "இறைவா! இம்மையிலும் மறுமையிலும் அழகிய அனைத்தையும் ஈந்தருள்வாயாக!" என்னும் நம் இறைஞ்சல், எந்நேரமும் நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டும்.

"தகாதுர்" என்பது அபரிமிதமான செல்வம், மதிப்பு ஆகியவற்றை அடைவதற்காகச் செலுத்தப்படுகின்ற முயற்சியைக் குறிக்கும். இத்தகைய வசதிகளைப் பெற்றோர், அத்தகைய வசதிகள் அற்றவர்களை, வாழ்த் தெரியாதவர்களென எள்ளி நகையாடுவதையும் உலகிற் காண முடிகின்றது. இம்மைச் செல்வங்களில் மூழ்கிவிடுவதனால் வாழ்வின் நிலையான– உண்மையான– வெற்றியைப் பெற்றுவிட முடியாது என்பதைக் காட்டுவதற்கு, "அவ்வாறில்லை (கல்லா)" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். "நீங்கள் அறிந்து கொள்வீர்கள்" என்னும் தொடர் இருமுறை கூறப்பட்டுள்ளது. முதல் முறை கூறப்பட்டதைத் தீமை செய்வோருக்கு எச்சரிக்கையாகவும், மறு முறை கூறப்பட்டதை நன்மை செய்வோருக்கு நன்மாராயமாகவும் கருத வேண்டுமென அறிஞர் பெருமக்கள் இதற்கு விளக்கம் தருகின்றார்கள். வேறு சிலர், கருத்தை வலியுறுத்திக் காட்டவே இருமுறை கூறப்பட்டதெனக் குறிப்பிடுகின்றனர்.

ஒரு பொருளின் உண்மையை அறிவதற்கு மூன்று வகையான நிலைகளைத் தத்துவ ஞான வித்தகர்கள் விளக்கிக் காட்டுவார்கள். ஒரு இடத்தல் புகை எழுவதைப் பார்த்தால், அவ்விடத்தில் நெருப்பு இருக்கலாமென நினைக்கின்றோம். இதனை அனுமானப் பிரமாணமென்றும், 'இல்முல் யகீன்' என்றும் குறிப்பிடுவர். இரண்டாவதாகப் புகை எழும் இடத்தை நெருங்கிச் சென்று, நெருப்பு எரிவதைக்

கண்ணால் காணுகின்றோம். இதனைப் பிரத்தியட்சப் பிரமாணம் என்றும், ‘ஐனுல் யகீன்’ என்றும் மொழிவர். மூன்றாவதாக, நெருப்பினுட் புகுந்து அதன் சூட்டை அனுபவிக்கின்றோம். இதனை அனுபவப் பிரமாணம் என்றும் ‘ஹக்குல் யகீன்’ என்றும் கூறுகின்றோம். இவ்வாறே கடலைத் தொலைவிலிருந்து காணுகின்றோம் முதலில் அனுமானமும், கரையை நெருங்கியவுடனே பிரத்தியட்சமும், குளித்து நீராடும் தருணத்தில் அனுபவமும் ஏற்படுகின்றன.

தீமையின் தன்மையும் இத்தகையதே. தீமையின் இயல்பைச் சிந்திப்போர் முதலில் அனுமானத்தின் வழி அதை உணர்கின்றனர். தீமையின் காரணமாகப் பிறருக்கு ஏற்படும் அழிவைக் காண்போர் பிரத்தியட்ச நிலையை அடைகின்றனர். பிறகு தமக்கே தீமை விளையும்போது அனுபவம் அடைகின்றனர். ‘தகாதுர்’ அத்தியாயத்தின் பிற்பகுதி இந்த மூன்று நிலைகளையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றது. ‘ஐயமற நீங்கள் அறிவீர்களாயின்’ என்னும் தொடர், அனுமானப் பிரமாணமெனும் ‘இல்முல்யகீன்’ நிலையினைச் சுட்டுகின்றது. ‘நீங்கள் நரகத்தைக் கண்டு கொள்வீர்கள்’ என்னும் தொடர் பிரத்தியட்சப் பிரமாணமாகிய, ‘ஐனுல் யகீன்’ நிலையினைச் சுட்டுகின்றது. ‘அருட்கொடைகளைப் பற்றி விசாரிக்கப்படுவீர்கள்’ என்னும் தொடர் அனுபவப் பிரமாணமெனும் ‘ஹக்குல் யகீன்’ நிலையினைச் சுட்டுகின்றது. இம்மூன்றாவது நிலைக்கு ஆதரவாக சூறா ஹாக்காவின் ஈற்றயல் வசனம் அமைந்துள்ளது. ‘வ இன்னஹு லஹக்குல் யகீன்’ (உறுதியாக இது ஒரு சிறிதும் ஐயமற்ற உண்மையாகும் (69 : 51)

இவ்வுலக ஆசைகளால் ஏற்படுகின்ற துன்பங்களையும், அவற்றால் இறைவனுடன் தொடர்பு ஏற்படாததையும் அறிந்து அவன் நரக வேகனையை இவ்வுலகிலேயே உணர்ந்து கொள்கிறான். மரணத்திற்குப் பின் எரி நரகைத் தன் கண்களாலேயே கண்டுகொள்கிறான். இறுதித் தீர்ப்பு நாளன்று அனுபவத்தையும் பெற்றுக்கொள்கிறான். இதனையே இவ்விறைமொழி எடுத்துக்காட்டுகின்றது.

அரிய தத்துவக் களஞ்சியமாக விளங்குகின்ற, பெரிய நூஹ் வலீயுல்லா அவர்களின் வேதபுராணம் இன்னிசைப் படலத்தில் இந்த சூறாவின் ஆழ்ந்த தத்துவங்களை இரண்டொரு தொடர்களில் நுட்பமாக அமைத்துள்ளார்கள். சில் வாழ்நாள் பல்பிணி மக்கள், குறிக்கோளுணர்ந்து நற்செயல் வசனமாகிய இறைமொழியும் மிகப்பெரும் துணைபுரியும். வேதனையும் துயரும் விலகுவதற்கு இந்த சூறாவை மும்முறை ஓத வேண்டுமென்றும், மழைபொழியும் போது இதனை ஏழுமுறை ஓதின் பெரும் பயன் பெறலாமென்றும், அஸருக்குப் பின்னால் இதைக் கொண்டு ஓதிப் பார்ப்பது தலைவலிக்குரிய ஆத்மீகப் பரிகாரமென்றும் பகர்வர்.

தும்ம– பின்னர்

ல துஸ் அலுன்ன– உறுதியாக நீங்கள் விசாரிக்கப் படுவீர்கள்

யவ்ம இதின்– அந்த நாளிலே

அனின் நயீம்– அருட்கொடைகளைப் பற்றி

நியாயத் தீர்ப்பு நாளன்று ஐந்து பொருட்கள் பற்றி ஆதத்தின் மக்கள் விசாரிக்கப்படுவார்களளென்னும் நாயக நன்மொழியொன்று ஈண்டு சிந்தித்துணரத் தக்கது. ஆயுட்காலம் எதனில் செலவிடப்பட்டது? வாலிபம் எதனில் செலவிடப்பட்டது? பொருள் எங்கிருந்து ஈட்டப்பட்டது? பொருள் எவ்வாறு செலவிடப்பட்டது? தெரிந்த காரியங்களில் எவ்வாறு செயலாற்றினான்?– அண்ணல் பெருமானார் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஐந்து வினாக்கள் இவையே. இறைவன் அருளியுள்ள அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துகின்ற நல்லடியார் குழுவிலே நாமும் இடம் பெறுவோமாக! அதற்கும், அவ்விறையருளே துணை நிற்பதாக!

**இறையருட் கொடைக்கெலாம் இறுதிதான் விசாரணை**
**மறையுரை தனை மறவாதிருப்போம்!** *(இனிமை பரவும்)*

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

■ சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அன்பிற்குரிய முரீதும் திண்டுக்கல் ஹாஜி. ஜே.முஹம்மது ரஹ்மத்துல்லாஹ் ஜே. முஹம்மது சதக்கத்துல்லாஹ் ஆகியோரின் மைத்துனருமான மணப்பாறை ஹாஜி. ஏ. முஹம்மது மைதீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் 4.12.2021 சனிக்கிழமை வஃபாத்தானார்கள். அன்று இரவு திண்டுக்கல் என்.ஜி.ஓ.காலனி. கே.ஏ.எம்.நகர். ஹவ்வா மஸ்ஜித் மையவாடியில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவன வாழ்வை நஸீபாக்குவானாக! ஆமீன்.

■ சிங்கப்பூர் ஹாஜா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் தாயார் ஜுனைதா பீவி அவர்கள் 20.12.2021 (பிறை 16) அன்று வஃபாத்தானார்கள்.ஆழியூர் பள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவனத்தை நஸீபாக்குவானாக! ஆமீன்!

*மக்களுக்கு ஒரு காலம் வரும். அக்காலத்தில் ஆரோக்கியம் என்பது 10 பாகமாக இருக்கும். அதில் ஒன்பது பாகம் ஜனங்களிடமிருந்து விலகி தனிமையில் அமர்ந்திருப்பதில் இருக்கும். ஒரு பாகம் மௌனமாக இருப்பதில் இருக்கும்.*

*(ஹள்ரத் அலீ –ரலி–)*

# இஸ்லாத்தின் உண்மை...

*வழுத்தூர், அஸ்ஸையித். முஹம்மது தாஹிர் பாவா வலிய்யுல்லாஹ் ஹஸனீ, காதிரீ (ரலி) அவர்களின் சுயம்பிரகாசம் நூலிலிருந்து..*

## கடவுள் தூதும், அவர் வாக்கியமும், அவர் செயலும்

29. கடவுளில் நின்றும் ஆத்மா. ஆத்மாவில் நின்றும் ஆகாயம். மற்றதெல்லாம் ஆகாயத்தில் நின்றுமுள்ளன. ஓ மனிதனே! உனக்கு உடலில்லை, உயிரில்லை, நாமமில்லை, ரூபமில்லை, நீ ஆகாயமுமல்ல, நீ ஆத்மாவுமல்ல, நீ யார் என்று பார்! உன் தத்துவங்களை ஞாபகம் செய், உனக்குள்ள பிணியும், வறுமையும், ஏலாத்தனமும் நீங்கும்! (குறிப்பு: “கடவுள் உள்ளமையில் நின்றும் இச்சிக்கிற தன்மை வெளியானால் அதற்கு (நஃப்ஸு) இச்சாசக்தி என்றும், பார்க்கிற தன்மை வெளியானால் அதற்கு (ரூஹு) ஆன்மா என்றும், அறிகிற தன்மை வெளியானால் (கல்பு) மனம் என்றும், இத்தன்மைகளை விட்டொழித்திருந்தால் அதை (தாத்) தத்ஸ்வரூபம் என்றும், இன்னும் நஃப்ஸாகிய இச்சையை- இப்லீஸ் அல்லது சாத்தான் (பிசாசு) என்றும் ரூஹாகிய ஆன்மாவை மலக்கு அல்லது தேவுத்தா (அமரர்) என்றும், கல்பாகிய அறிவை இன்ஸான் (மனிதன்) என்றும் ஆத்ம ஞானிகள் கூறுகின்றனர்.”)

30. நீ இதற்குமுன் எங்கிருந்தாய்? தாய் தகப்பனின் இந்திரியமாயிருந்தாய்; அதற்கு முன் உணவு வர்க்கமாயிருந்தாய்; அதற்கு முன் மண்ணாகயிருந்தாய்; அதற்குமுன் ஜலமாயிருந்தாய்; அதற்கு முன் வாயுவாயிருந்தாய்; அதற்கு முன் அக்கினியாயிருந்தாய்; அதற்கு முன் ஆகாயமாயிருந்தாய்; அதற்குமுன் அறிவாகாயமாயிருந்தாய். அதற்குமுன் கடவுளின் உள்ளமையாயிருந்தாய் அதற்கு மேல் உனக்குப் பதவி இல்லை!

31. ஜலத்தின் அசைவால் சூரியனின் பிம்பம் அசைவது போல் தோன்றுவதும், ஓடுகிற வண்டித் தொடரினால், நிற்கிற வண்டித்தொடர் ஓடுவதாக தோன்றுவதும் எப்படிப் பொய்யோ, அவ்வாறே தம் அறிவின் அசைவால் உலகங்களும் தோன்றி மறைவதாகத் தோன்றுகின்றன. நமக்கோ யாதோர் அசைவுமில்லை.

32. அஞ்ஞானமோ- சாத்தான் (இப்லீஸ்). உனக்கு சந்தேகத்தை வருத்தி துவிதத்தைப் போதித்துக் கடவுளைவிட்டும் தூரமாக்கி விடுவான். அவரைவிட்டுத் தூரமாவதைவிடக் கொடிய நரகம் ஒன்றுமில்லை. நரகம் எந்த கிரகமென்று உனக்குத் தெரியுமா?

33. நரகத்தில்– சிலர் வயிற்றால் நகர்வார்கள்; சிலர் நெஞ்சால் நகர்வார்கள்; சிலர் ஆகாயத்தில் பறப்பார்கள்; சிலர் கீழே நடப்பார்கள். சிலர் புல் பூண்டாக முளைப்பார்கள். சிலர் புழுப்பூச்சியாக ஊர்வார்கள்! அதன் தட்டுப்பலது. ஒருவரும் நரகம் புகாமல் சொர்க்கம் புகமாட்டார்கள்!

34. நரகத்தின் வேதனைகளை அனுபவிக்க ரூபங்களை மாற்றப்பட்டிருக்கும். அஞ்ஞான– துவிதமே அதன் கொடிய நெருப்பு, அதைக்கண்டு அறிவாளிகள் அஞ்சுவார்கள். எல்லாத் துன்பத்திற்கும் காரணம் அஞ்ஞானமே!

35. கடவுள் ஆதமை (ஆதாம்) சிருஷ்டித்துத் தன் உள்ளமையை அறிவித்து எல்லாவற்றிற்கும் நீரே தலைமை ஆனவர் என்று ஆசீர்வதித்துத் தன் அம்சமாகிய ஆதாமும் வானவர்களைச் சாஷ்டாங்கம் செய்யும்படி ஏவினார். எல்லாரும் செய்தார்கள். சாத்தான் துவிதத்தால் மறுத்து விட்டான். ஆகையால், அவன் பேரில் முனிவு செய்தார்.

36.கடவுள் துவிதமான அமானிதத்தை எடுத்துக்காட்டி எல்லா வஸ்துக்களிடத்திலும் "உங்களில் யாராவது சுமக்கக் கூடுமோ?" என்று கேட்டார்; எல்லாம் மறுத்து விட்டன. மனிதன் அதைச் சுமந்து மூடனாகவும், அனியாயக்காரனாகவும் ஆனான்! (குறிப்பு: முடிவில்லாத கடவுளே முடிவில்லாத ஆத்மா. முடிவில்லாத ஆத்மாவே முடிவில்லாத மனம். முடிவில்லாத மனமே முடிவில்லாத ஆகாயம்; முடிவில்லாத ஆகாயமே முடிவில்லா "அனா" என்கிற நான்! இந்த நானென்ற ஞாபகத்தைத்தவிர வேறெந்த ஞாபகமும் இருக்கக்கூடாது. இந்த நானென்றது குர்ஆனில் "அனல்லாஹு" அதாவது: "நான் அல்லாஹ்– கடவுளாயிருக்கும்" என்ற நானைத்தவிர வேறில்லை!)

37. கடவுள் ஆதாமை துவிதமாகிய மரத்தருகில் (மார்க்கம்) முடுகவேண்டாமென்று கட்டளை செய்தார். சாத்தான் அவரை ஏமாற்றி அதன் சமீபத்தில் இருக்க (முடுகும்படி)ச் செய்து விட்டான். ஆனதால் கடவுள் அவர்பேரில் கோபமாகி "பாபிகள் என் சமீபத்தில் இருக்கக்கூடாது" என்று துரத்திவிட்டார். அதன் பேரில் ஆதாம் மிகவும் சஞ்சலப்பட்டார். அதனால் அவர் பேரில் கிருபையாகி, அவர் துவிதத்தைப் போக்கி அத்துவிதத்தை உபதேசித்து, அவர் பாவத்தை மன்னித்தார்.

38. நீ நாம ரூபத்தில் கட்டப்பட்டு உன்னைச் சிறிய பொருளாய் அறிந்திருக்கிறாய்! நீயோ முடிவில்லாத அகண்டமானவன்! காலமும் உன்னை அறிந்து கொள்ளாது! உன் தத்துவங்களுக்கோ முடிவில்லை; சர்வமும் உனக்கு அடிமை!

39. நீயும் கடவுள் அரூப அம்சத்தைப் போல் விரிவாய்க்கொள்! உன் அஞ்ஞானம் நாசமாகும். இப்படி விசாலமாய்க்கொண்டவர்கள் அனேகர்! சிலர் சந்திர மண்டலம் வரையிலும், சிலர் சூரிண மண்டலம் வரையிலும், சிலர் அதற்கு மேலாகவும், சிலர் பூரணத்தையும் விருத்தி செய்திருப்பார்கள்.

40. இவ்வாறான உன் விகாசத்தைப் பூரணமாக்கி இருந்தால் ஆகாயத்தில் சுற்றும் கோளங்கள் எல்லாம் உன் எண்ணத்தின் அலைகளாக இருக்கும்! இது வாசித்த கல்வியல்ல. அசரீரி வாக்கினால் உண்டாகும் கல்வி! நம்மைப் போன்றவர்களைத் தவிர எல்லோரும் இதை அனுசரிக்க வேண்டிய நிர்பந்தமில்லை.

41. **எந்த மதத்தையும் தூஷணம் பண்ணாதே! எந்த மதத்திலும் இருக்கிற தவறுகளை நீக்க அஞ்சாதே! உனக்குக் கெட்டபேர் வந்தாலும் வரட்டும். முடிவில் நீ நல்லவனாயிருப்பாய்! ஞானத்தில் எல்லோரும் ஒற்றுமையாகும் காலமும்வரும்!**

42. ஸ்திரீகளின் பேரில் வெறுப்பில்லாமல் அன்பாயிரு. அநாகரீகமான செய்கைகளை விட்டுவிடு! கடவுளைப் பின்னமாக்கி அவர் மகத்துவத்தைக் குறைக்காதே! அவரைத் துவிதமாக வணங்காதே. வணக்கம் இன்னதென்று அறியாமல் அவரைத் துவிதமாய் வணங்கினவர்களுக்கே நரகம்! அரூபத்தில் சொரூபங்களை மறந்தவனாக சொரூபங்களில் அரூபத்தை நினைந்தவனாக நடுநிலையாக இருந்து கொள்!

43. (பூரணத்துவத்தை அடைந்த) ஞானிகளைக் கண்டால் வணங்கு. அவர்களிடத்தில் கடவுள் வாசம் செய்கிறார். துவைதிகளை விரட்டு, அவர்கள் பேரில் முனிவு உண்டாய்க் கொண்டிருக்கும், நீ நல்லவனாகிவிட்டால் ஒன்றையும் தீங்காகப் பார்க்காதே நரகமோ துன்பம், சொர்க்கமோ இன்பம்!

44. மலக்கிருமிக்கு மலமே இன்பம். வாசனையுள்ள புஷ்பத்தின் கிருமிக்கு புஷ்பமே இன்பம். அவ்வாறே நரகவாதியின் துன்பமும், சொர்க்கவாதியின் இன்பமும். நரகவாதிகள் சொர்க்கத்தை மேலாகவும், சொர்க்கவாதிகள் நரகத்தைக் கீழாகவும் காண்பார்கள். சொர்க்கத்தை எந்த கிரகமென்று நீ அறியமாட்டாய்!

45. ஏழு நரகம், ஏழு சொர்க்கம் என்று நீ கேள்விப்பட்டிருப்பாய். அதன் உண்மை உனக்கு இன்னதென்று விளங்காது. ஈரேழு பதினான்கு லோகமிருப்பதாயும் கேள்விப்பட்டிருப்பாய். நீ எந்த கிரகத்திற்கு சந்தோஷமாய் அனுப்பப்படுவாயோ, எந்த கிரகத்திற்கு கோபமாய்த் துரத்தப்படுவாயோ! ஆனால் உலகங்கள் எண்ணிக்கையற்றதாய் இருக்கின்றன. ஒரு சமயம் பூமியில்தான் சிறைபட்டிருப்பாயோ அறியமாட்டாய்!

46. எல்லா கிரகங்களும் ஒரே சுபாவமானதல்ல. சிலது ஏக இருளாக இருக்கும், அதில் பிசாசுகள் வாசம் செய்யும். மகா பயங்கரமானது, சிலது ஏக ஒளியாயிருக்கும்; அதில் வானவர்கள் வாசம் செய்வார்கள். மகா ஆனந்தமானதாயிருக்கும்!

47. சில கிரகங்கள் ஏக அக்கினியாக இருக்கும். அதிலுள்ள வஸ்துக்களெல்லாம் அக்கினி மயமாகவே இருக்கும். இவ்விடத்தில் வஸ்துக்களைப் போட்டால் பற்றி எரியும். சில கிரகங்கள் பனியால் ஏகக்குளிராக இருக்கும்; அக்கினிகூட அதில் ஜீவிக்காது!

48. சில கிரகங்கள் மிகச் செழிப்பாயிருக்கும். அவ்விடத்தில் வறுமையும், பிணியுமில்லை. நல்ல சௌந்தரியமான ஆண்களும் பெண்களும், நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்திருப்பார்கள். நல்ல கனி வர்க்கங்களும், உணவுகளும், குடிப்புகளுமிருக்கும். சதாவும் பருவகாலமாகவே இருக்கும். வித்து– தரையில் விழுந்தவுடன் அறுக்க (கைகொள்ள) பதமாய் விடும்!

49. சில கிரகங்கள் மிகப் பாழானதாக இருக்கும். வறுமையும் பிணியுமாயிருக்கும். கொடிய விஷ ஜந்துக்கள் மிகுதியாய் வசிக்கும் வெய்யில் அகோரமாயிருக்கும் சகிக்க முடியாது. புற் பூண்டுகள் எல்லாம் கருகிப்போயிருக்கும். மழை அருமையாயிருக்கும்!

50. சில கிரகங்களில் நான்கு சந்திரன் பிரகாசிக்கும். சில கிரகங்களில் எட்டுச் சந்திரன் பிரகாசிக்கும். சில கிரகங்களில் பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள் நிறமுள்ள சூரியன் இரண்டு, மூன்று மாற்றி மாற்றிப் பிரகாசிக்கும். அவ்விடத்துப் புஷ்பங்களும், விருஷங்களும், பஷிகளும் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்!

51. சில கிரகங்களில் மனித வர்க்கமே இல்லை! சில கிரகங்களில் புற் பூண்டுகளே இல்லை. சில கிரகங்களில் ஜீவ ஜந்துக்களே இல்லை. சிலகிரகங்களில் வாயுவேயில்லை. சில கிரகங்களில் ஜலமே இல்லை. கடவுள் இதை யாருக்காக படைத்திருக்கிறாரோ! *(பிரகாசம் பரவும்)*

---

**பிழை திருத்தம்.....**

*சம்பூரண சுயம் பிரகாசம் தொடர் கட்டுரையில் 2021 ஆகஸ்ட் மாத மறைஞானப் பேழையில்....*

7. மாயையென்பது அவன் தோற்றத்தில் சாத்தான் எனப்படும். அவன் **அகப்படவேண்டும்;** எனத் தவறாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதனை **அகப்படவேண்டாம்;** எனத் திருத்தி வாசிக்குமாறு வேண்டுகிறோம். **உணர்த்திய வாசகருக்கு நன்றி.**



# மதுரஸா நன்கொடை



**திண்டுக்கல்**

திண்டுக்கல் R.M. காலனி சபியாம்மா குடும்பத்தார் அனைவரும் நோய் நொடி இல்லாமல் இருக்க முஹியுத்தீன் ஆண்டகை மவ்லிது ஓதி துஆ செய்ய ரூ. 1000 /– ம்,

திண்டுக்கல் மதுரை ரோடு தமீம் ஹோட்டல் உண்டியல் சேமிப்பு ரூ. 1500 /– ம்,

கொச்சின் K.M. பாபு அவர்கள் புதிய வீடு பூர்த்தி ஆக நிய்யத் செய்து ரூ. 500 /– ம்,

காரைக்குடி ஜெஸ்மின் பானு– சஹாபுதீன் இல்லற வாழ்க்கை சந்தோஷமாக இருக்க துஆ செய்ய ரூ. 1000 /– ம், ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 1000 /– ம்,

ஈரோடு மர்ஹூம் கலீபா ஹாஜி N. அப்துல் ஜப்பார் அவர்களுக்கு யாஸீன் ஓதி ஹதியா செய்ய ரூ. 4000 /– ம்,

சென்னை S. சர்மிளா உசேன் துஆ செய்ய உணவுக்காக ரூ. 500 /– ம்,

மதுரை S. சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா நன்கொடை ரூ. 1000 /– ம்

உத்தமபாளையம் முஹம்மது அப்துல்லா ரூ. 1810 /– ம்,

உத்தமபாளையம் முஹம்மது சித்தீக் காணிக்கை ரூ. 2700 /– & நிய்யத் படி ரூ. 5000 /– ம்,

உத்தமபாளையம் ஷேக் மைதீன் ரூ. 2000 /– ம்,

உத்தமபாளையம் ஜப்பார் ரூ. 3000 /– ம்,

உத்தமபாளையம் கலந்தர் ரூ. 700 /– ம்,

உத்தமபாளையம் முஹம்மது ஆரிப் ரூ. 1000 /– ம்,

உத்தமபாளையம் பேஷன் பாரடைஸ் ரூ. 2000 /– ம்,

உத்தமபாளையம் முஹம்மது ரியாசுத்தீன் ரூ. 1000 /– ம்,

உத்தமபாளையம் முஹம்மது இஷாக் ரூ. 2000 /– ம்,

உத்தமபாளையம் மர்ஹூம் பரீதா ரூ. 500 /– ம்,

திண்டுக்கல் **M.** முஹம்மது யாஸீன் தகப்பனாரும், ஹாஜி **J.** முஹம்மது ரஹ்மத்துல்லா, **J.** முஹம்மது சதக்கத்துல்லா ஆகியோரின் மைத்துனரான மர்ஹூம் ஹாஜி **A.** முஹம்மது மைதீன் அவர்களுக்கு 9/12/2021 ஆம் தேதி 6- ஆம் நாள் பாத்திஹாவை முன்னிட்டு பாபங்களை மன்னித்து சுவனத்தில் இருக்க ஹத்தம் ஓதி துஆ செய்ய பிரியாணி விருந்துக்கு ரூ. 15000 /- ம்,

காரைக்கால் **R.A.** அப்துல் பாருக் பாத்திமா குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500 /- ம்,

சென்னை சனோபர் நிஷா துஆ செய்ய உணவுக்காக ரூ. 1200 + 2000 மொத்தம் ரூ. 3200 /- ம்,

பாக்கம் கோட்டூர் பரீதா நாச்சியா அவர்கள் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் **R.M.** காலனி **SMK.** கத்தீஜா பீவீ குடும்பத்தினர் சுபஹான மவ்லிது ஓதி துஆ செய்ய ரூ. 1001 /- ம்,

ஈரோடு **K.A.** சகாபுதீன் சிகிச்சை பூரண குணமடைய துஆ செய்ய ரூ.500/-ம்,

ஈரோடு மௌலவி கலீல் ரஹ்மான் யாஸீனிய் மூலம் நேர்ச்சை காணிக்கை ரூ. 2000 /- + ரூ. 4000 /- ம்,

ஈரோடு **S.** பிரியதர்ஷினி **D/O** சண்முகம் கல்லூரியில் சேர துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

மதுரை அலாவுத்தீன் தகப்பனாரின் மஃபிரத்திற்க்காக துஆ செய்ய நன்கொடை ரூ. 10000 /- ம்,

திண்டுக்கல் **R.M.** காலனி **M.** சமீம் அவர்கள் சுபுஹான மவ்லிது ஓதி துஆ செய்ய ரூ. 501 /- ம்,

எமனேஸ்வரம் சிக்கந்தரம்மாள் முஹம்மது பாரூக் தம்பதியினரின் குடும்பச் சிக்கல் தீரவும் மதுரை **S.** சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா நன்கொடை ரூ. 1000 /- ம், ஹாஜத்துகள் நிறைவேறவும் துஆ செய்ய ரூ.4000/ம்,

எமனேஸ்வரம் நாஃபிஃ சேக்முஹம்மது அவர்களுக்கு விரைவில் பெண் அமைந்து நல்லபடி திருமணம் நடைபெற துஆசெய்ய ரூ. 1000/- ம்

**மதுக்கூர்**

மர்ஹூம் முகம்மது அபூபக்கர் அவர்களின் வருட பாத்திஹாவை முன்னிட்டு சகல நன்மைகளுக்கும் துஆ செய்ய மதரஸா பிள்ளைகளுக்கு உணவு வழங்க ரூ. 10000 /- ம்,

**K.R.K.L.** மும்தாஜ் தமது மகளாரின் சுகப் பிரசவத்துக்கு துஆ செய்ய காணிக்கையாக ரூ. 1000 /- ம்,

சேக் இதயதுல்லா நாட்டங்களும் தேட்டங்களும் நிறைவேற துஆ செய்ய ரூ. 1000 /– ம்,

**M.M.** முகம்மது உசேன் ஜரீனா உண்டியல் தனது மகனின் திருமணம் சிறப்பாக நடக்கவும் நல்வாழ்வு வாழவும் துஆ செய்ய உண்டியல் சேர்த்த வகையில் ரூ. 8790 /– ம்,

**K.** நத்தர்ஷா தனது பேரனின் பிறந்த நாளை (17.12.21) முன்னிட்டு பிள்ளையின் நல்வாழ்விற்கு துஆ செய்ய நன்கொடை ரூ. 1000 /– ம்,

ஷாஜஹான் தனது ஹோட்டலில் வியாபாரம் நல்லபடியாக நடக்க துஆ செய்ய உண்டியல் சேர்த்த வகையில் ரூ. 1265 /– + 2000 /– ம்,

**A.** கமால் பாஷா அனைத்து நலங்களுக்கும் துஆ செய்ய மதரஸா நன்கொடையாக ரூ. 1000 /– ம்,

**O.P.U.R.** பஷீர் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாக துஆ செய்ய மாத சந்தாவாக ரூ. 1500 /– ம்,

**A.** நூர்ஜஹான் பீவி தமது உடல் நலத்துக்கும், நீண்ட வாழ்வுக்கும் துஆ செய்ய ரூ. 500 /– ம்

**O.P.U.** அப்துல் ரெஜாக் மனைவி மர்ஹூமா ஆயிஸா பீவி 40 –வது நாள் பாத்திஹாவை முன்னிட்டு குர்ஆன் ஓதி ஹத்தம் செய்து அவர்களின் மறுமை வாழ்விற்கு துஆ செய்ய (9.1.22) 40– வது நாள் துஆ செய்யவும் பிள்ளைகளின் உணவுக்காக ரூ. 10000 /– ம்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு வாப்பா நாயகம் அவர்களின் பொருட்டால் அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை நிறைவேற்றியருள்வானாக! ஆமீன் !**

---

வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா? **மறைஞானப் பேழை சந்தா அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 20980100025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

**7 ஆம் பக்கத் தொடர்ச்சி .....**

**குறிப்பு**

மூத்த ஆத்ம சகோதரர்கள், மேல்காணும் ஆலோசகர்கள் குழுவின் வழிகாட்டுதல்படியும்,

அபுதாபி **H.** ஜஉபர் **MCA., MBA.,** மற்றும்

திண்டுக்கல் **K.** ஜனுல் ஹக் **B.E, MBA** மற்றும்

**M.** ஆசிக்குர் ரஹ்மான **MS (IT),** சிங்கப்பூர்

ஆகியோரின் ஒருங்கிணைப்போடு இந்த இணையதளங்களின் மேம்பாட்டு **(Enhancement)** பணிகள் தொடர்ச்சியாக நடைபெறும்.

ஆத்ம சகோதரர்கள் அனைவரும் இந்த இணையதளங்களின் வாயிலாக எதிர்காலங்களில் பகிரப்படும் அனைத்து விடயங்களையும் தாங்கள் சார்ந்து இருக்கும் மீடியா குழுமங்களில் **(Facebook, WhatsApp etc.,)** பகிர்ந்து நமது ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் **அதிகாரப்பூர்வ இணையதளங்கள்** பொது மக்கள் மத்தியில் பிரபல்யமாக ஒத்துழைத்து இணையதளங்களின் மேம்பாடு **(Enhancement)** சம்பந்தமான கருத்துக்களை பின்வரும் வாட்ஸ்அப் எண்களில் தெரிவிக்கவும்.

**+971507584002 +91 9791005272**

**Khalifa Dr.AP.** ஷஹாப்தீன் **B.E., MBA., Ph.D.,**

குளோபல் தலைவர், ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை.

**(தகவல்: ஜஉபர் சாதிக் ஹக்கிய்யுல் காதிரிய்– அபுதாபி)**

---

■ விசுவாசிகளே! உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் நரகைவிட்டுக் காத்துக் கொள்ளுங்கள். அதன் எரி பொருள் மனிதரும் கற்களுமாகும். (66.6)

■ பூமியிலுள்ள அனைத்தும் அழிந்தே போகும். மிக கண்ணியமும் பெருமையும் தங்கிய உங்களது இறைவனின் திருமுகம் மட்டும் (அழியாது) நிலைத்திருக்கும். (55.27)

**அ**ல்லாஹ்வின் மீது ஆணையாக! மறுமையோடு ஒப்பிடும்போது இவ்வுலகின் நிலை, உங்களில்ஒருவர் தம் ஆட்காட்டி விரலை கடலில் வைத்தால் அதில் எந்த அளவு தண்ணீர்ஒட்டிக் கொள்கிறது என அவர் பார்க்கட்டும்.(அந்தக் குறைவான அளவுதான் உலகம் என்று பெருமானார் அருளினார்கள். (நூல்: முஸ்லிம்)

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தரார் ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித்**

**யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **240/-** |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **1800 /-** |

**சந்தா தொகை அனுப்ப முகவரி மாற்றம் மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 99437 86269 - 9944576165**


## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 750 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 7000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 400 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 300 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 3000 |

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul


## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸ னிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee